[illegible]

[illegible] 6

Jan 1934

TSL
0072111, N28 SM
N34·7·9
186935

473

REGD. NO. M.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ. § ஸ்ரீமுக—தை: 1934—ஜனவரி § திங்கள் சு.

| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| க. | தமிழன்பர் மகாநாட்டின் முடிவு ... ... | 113 |
| உ. | சிவநேசனுக்கு வாழ்த்து ... ... | 116 |
| ங. | அவனன்றி ஓரணுவும் அசையாது ... ... | 117 |
| ச. | இப்படிக் கிடப்பவள் எப்படிப் பெறுவாள்? ... | 119 |
| ரு. | சோழன் கரிகாலன் ... ... | 120 |
| சு. | அமங்கிலிகள் ... ... | 121 |
| எ. | உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ... ... | 122 |
| அ. | இந்துமதக் கொள்கைகளும் சுகாதாரங்களும் ... | 125 |
| கூ. | தமிழன்பர் மகாநாடு ... ... | 128 |
| ௰. | சிவபெருமான் குணாதீதர் ... ... | 134 |
| ௰க. | வினா ... ... | 135 |
| ௰உ. | சீதையின் வரலாறு ... ... | 136 |
| ௰ங. | இருபா விருபஃது ... | (41—48) |
| ௰ச. | பழமலைக் கோவை ... | (17—24) |

ஆசிரியர் ராம. சு. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உன்னூர்:—மார்கழி களஉ காலை சிவாலயத்திலும் குமார விநாயகர் திருக்கோயிலிலும் நடராஜாபிடேகமும், ஆருத்ரா தெரிசனமும் சிறப்பாக நடைபெற்றன.

தோநகர்:—கற்பகவிநாயக கலாசாலைப் பாலருவாயர் கழகம், மார்கழித்திங்கள் ககூஉ மாலைமூன்றுமணிக்கு இந்நகர்த் திருவாளர் ராம. சு. ராம. இராமநாதன் செட்டியார் தலைமையில், க. வி. க. மாணவர்களும், தலைமையாசிரியர் சோமசுந்தரம்பிள்ளை, உதவியாசிரியர் சண்முகம்பிள்ளை, சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் ஆகியவர்களும் விரிவுரையாற்ற இனிது நடைபெற்றது.

சிவாலயத்தில், அற்புதத் தனிக்கூத்தாடும் அண்ணலார்க்கு மார்கழித் திங்கள் கஅஉ திருவாதிரைத் தெரிசன நன்னாளில், அபிடேக ஆராதனைகள்புரிந்து, அப்பெருமானைத் திருவீதிக்கு எழுந்தருளுவித்த காலையில், கற்பகவிநாயக கலாசாலை மாணவர்களும் கணேசர் கல்விச்சாலை மாணவர்களும் இன்னிசைக்கருவிகளுடன் தனித்தனி இருகோஷ்டிகளாகத் தமிழ்மறைப்பாராயணம் செய்துகொண்டு வந்தனர். மாணவர்களின் இசைஞானத்தையும் பாடும் வன்மையையும் கண்ட மக்களனைவரும், குழந்தைகளைச் சுற்றிலும் குழுமி வியந்து பேசிய வண்ணமாகவே இருந்தனர்.

தேவகோட்டை:—மார்கழிஉகூஉ நகரச்சிவாலயத்திலிருந்து அஷ்டமிபிரதக்ஷிணம் நடைபெற்றது. ஐம்பெருங் கடவுளர் எழுந்தருளிய வைபவம் கைலாயக் காட்சிபோன்றிருந்தன. வேதபாராயணமும் மேளவாத்தியங்களும் முழங்கின. பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் சூழ்ந்திறைஞ்சினர்.

ஆவினிப்பட்டி:—விவேகானந்தர் கல்விக்கழகத்தின் ஏழாவதாண்டு ஏழாமாதக்கூட்டம் மார்கழி உளஉ மாலை திரு. கயி. வினைதீர்த்தான் ஆசாரியவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவர்களால் 'தவத்தில் தர்மசிந்தனை, கல்லானைக்குக் கரும்பருத்தியது, அறிவா லெய்தும் பயன், சீவகாருணியம், பண்டைத் தமிழரின் சமயநெறி, மனைவியின் கடமை, ஒழுக்கம்' என்னுங் கட்டுரைகளும், வினாவிடைகளும், தலைவரால் சிவப்பிரகாச சுவாமிகளின் கல்வித் திறனும், ஆசிரியரால் வந்தனமுங் கூறப்பெற்றன.

சைவசித்தாந்த மகாசமாஜம்:—இதன் இருபத்தெட்டாம் ஆண்டுநிறைவுவிழா, மார்கழி கரு, கசு, களஉகளில், காக்கைத் தமிழ்ச்சங்கப் பேரவைக்களத்தில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் சைவத்திருவாளர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமையில், தக்க பேரறிஞர்களின் விரிவுரைகளுடன் இனிது நடைபெற்றது. இதனையொட்டிச் சைவமங்கையர் மகாநாடு திருமதி மாணிக்க வாசக சரோஜனி அம்மையார் தலைமையிலும், சைவஇளைஞர் மகாநாடு தஞ்சைத் தமிழறிஞர் சைவத்திருவாளர் கீ. கந்தசாமி பிள்ளை எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் தலைமையிலும் நடைபெற்றன. இச் சைவர்மகாநாட்டில் தீர்மானங்கள் பல நிறைவேறின. அத் தீர்மானங்களுள், திருத்தென்குடித் திட்டையில் நடைபெறும் சித்தாந்த வித்தியாசாலைக் கட்டடத்தை விரைவில் முடித்துப் பாடந் தொடங்கச் செய்யவேண்டும்' என்பது ஒன்று.

சமாஜத்தாரின் அபிமானத்துக்கு நன்றியாராட்டுவதுடன், அவ்வாறே இனிது நிறைவேறத் திருவருட்டுணைகொண்டு முயன்று வருகின்றேன். (ப-ர்.)

காளையார்கோயில்:—கா. செ. மடாலயஸ்தாபகரும், தேவகோட்டை ஜெமீந்தாரரும் ஆகிய உயர்திரு அருணாசல சுவாமிகளின் முதலாவது குருபூசை மார்கழி ககூஉ மிருகசீரிட நாளிற் சிறப்பாக நடைபெற்றது.

26 APR 1935

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| ஆண்டு எ | பலவான்குடி—ஸ்ரீமுக—தை | திங்கள் கூ. |
| --- | --- | --- |

உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## தமிழன்பர் மகாநாட்டின் முடிவு.

இம் மகாநாடு சென்னைமா நகர்க்கண் திருமுக மார்கழி கூ, ௰உகளில் நடைபெற்று முடிவுற்ற தீர்மானங்களை இத் தலையங்கத் தினையடுத்தும், தமிழ்ப் புத்தகக் காட்சிச்சாலையைத் திறந்துவைத்த கனம் இராமநாதபுரம் இராஜா அவர்களின் விரிவுரையும், மகாநாட்டைத் திறந்துவைத்த கனம் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் விரிவுரையும் இதன் 128 முதல் 133-வது பக்கம் வரையிலும் காணலாம். வரவேற்புக் கழகத் தலைவர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் மறைத்திருவாளர் உ. வே. சாமிநாதையரவர்களின் விரிவுரை மாசித்திங்களில் வெளிவரும்.

தீர்மானங்கள் தக்கார் பலர்கூடிச் செய்யப்பெற்றன வாயினும், சாதாரணமாக யாதொரு தீதின்றி நிறைவேறியதெனக் கொண்டு மகிழவேண்டிய நிலைமையில், நவீன நடிகர்கள் கொண்டுவந்த சில தீர்மானங்கட்கு இடங்கொடாதிருந்தால் யாருங் குறை கூறுவதற்கில்லை. ஆங்கிலமே யாண்டும் தாண்டவமாடும் இக்காலத்தில், தமிழன்பர் மகாநாடு தலைநிமிர்ந்தெழுந்தது சாலமகிழ்ச்சிக் கேதுவெனவெதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாகச் சாதி சமய சம்பந்தமான பாடங்களை அகற்றவும், தமிழெழுத்துக்களைத் திருத்தவும் இடங்கொடுத்தது, பலர் மனஞ் சலித்தற்கு இடமானதோ டமையாது, தமிழ் உருவைச் சிதைப்பதாக—தமிழ்வளர்ச்சியைத் தடுப்பதாக—பழந்தமிழ் நூல் வரம்பைப் பாழ்படுத்துவதாக—இலக்கண அமைதிக்கு இடையூறு விளைப்பதாக வன்றோ முடிகிறது.

“கோனிலை திரிந்து கோடை நீடினும், தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை”யைத் திரிபுபடுத்தத் தமிழன்பர் மகாநாட்டினர்க்காவது மற்றும் யாருக்காவது இயலாதே.

கடவுள் வழிபாட்டை அகற்றிப் பாடந்தொடங்க வேண்டுமென்ற தீர்மானத்துக்கும் இடங்கொடாதிருந்தது, தமிழன்பர் மகாநாட்டின் ஆத்திகத் தன்மையைக் காட்டுவதாகும். தெய்வச்செந்தமிழ் விளக்கத்திற்குத் தெய்வவழிபாடு வேண்டாவெனத் தீர்மானங் கொண்டு வந்தோர், உயிர்தொறும் ஒளிக்கும் கள்வனாகிய ஆண்டவனுக்கும் மேற்பட்டார் போலும். தெய்வ சம்பந்த மில்லாத நூல்கள் பயில்வதென்றால், உயிரற்ற உடலைத் தழுவியதோடொக்கும். அத் தீர்மானத்துக்கும் மகாநாடு இடந்தந்திருக்குமானால், முற்றும் சுத்த சூனியமென்றே கொள்ள நேரும். அவ் வாபத்தினின்றும் மகாநாடு தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியமே.

வரவேற்புக் கழகத் தலைவர் விரிவுரையில், ‘பலருக்குப் பொதுவான பாஷையில் தங்கள் மனம்போனவாறு தம் கொள்கைகளைப் புகுத்திவிடுதல் சரியன்று.” எனத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அது மிகக் கவனிக்கத் தக்கதாகும். மேலும், அவர்கள் “தமிழ்நாட்டார் பேசும்பொழுதும் எழுதும் பொழுதும் தமிழையே உபயோகிக்கவேண்டும்.” எனக் கூறியுள்ளார்கள். அவ்வாறு ஒரே ஒரு தீர்மானம் நிறைவேற்றித் தமிழ்நாட்டாரெல்லாம் பெயர் விலாசங்களும் பேச்சும் எழுத்தும் தமிழிலேயே வழங்கத்தலைப்பட்டால், தமிழ் தழைத்துச் செழித்தோங்காதா? தமிழெழுத்தைத் திருத்தாவிடிற்றான் தமிழ்வளஞ் சிறந்தோங்குமோ? இதுபற்றி முன்னமே நம் சிவநேசன் ஆண்டு ௬: வாரம் ௭, ௯ ல் வந்திருக்கும் “**தமிழெழுத்தைத் திருத்தவேண்டுமா? உம் தலையெழுத்தைத் திருத்தவேண்டுமா?**” என்றவியாசத்தால், தமிழெழுத்தைத் திருத்த வேண்டுமென்பார் கூற்றுக் **கண்டிக்கப்பட்டது காண்க.**

வீண் ஆரவாரமான பயனற்ற தீர்மானங்களைப்போட்டுக் குழப்பித் தமிழை வளர்க்கப் பாடுபடுவதைப் பார்க்கிலும், உள்ளது உள்ளபடியே இருக்கட்டும் என்றுவிட்டுவிடுதலே மேன்மையாகும்.

“தெய்வச் செந்தமிழினுந் திருத்தமா?” என்பது பற்றியும், பிறவும் அடுத்த முறை ஆராய்வோம்.

* * *

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்:

1. ‘நவீன சாத்திர நூல்கள் தமிழில் எழுதப்பட்டுப் பள்ளிக்கூடங்களில் தமிழிலேயே கற்பிக்கப்பட வேண்டும். 2. பொதுக் கலாசாலைகளி[illegible]ரையப்படும் தமிழ் நூல்கள் எளிய

186935



நடையுள்ளதாக இருக்கவேண்டும். 3. தமிழில் தக்க பதங்கள் இல்லாதவிடத்து வழக்கத்திலுள்ள பதங்களை உபயோகித்தல் உசிதம். 4. பழந் தமிழ் நூல்கள் தகுந்த சிரத்தையுடன் படிக்கப்படவேண்டும்; அதில் ஊக்கம் உண்டாக ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். 5. தற்காலத்துப் பள்ளிச் சிறார்களுக்கு ஏற்ற முறையில் பழந்தமிழ் நூல்களைத் தொகுத்தும் திரட்டியும் வெளியிடவேண்டும். 6. தமிழில் பல பொருள் விளக்கநூல் ஒன்று தயாரிக்கப்படவேண்டும். 7. பள்ளிச் சிறுவர்களுக்காக ஏற்படுத்தப்படும் புத்தகங்களில் நல்ல சித்திரப் படங்களிருத்தல் வேண்டும்; கல்வி போதிப்பதற்கான கருவிகள் உபயோகிக்கப்படவேண்டும். 8. தமிழ் உயர் தனிச் சிறப்புடையது என்பதை உணரும்படி செய்வதற்கான முறைகளைக் கையாளவேண்டும்; அரசினர் தமிழ்ப் பாஷைக்குப் போஷரவு அளிக்கவேண்டும்; தமிழாசிரியர்களை மற்ற ஆசிரியர்களின் அந்தஸ்தில் வைக்கவேண்டும். 9. ஸ்தல ஸ்தாபனக் கூட்ட நடவடிக்கைகள் தமிழிலேயே நடத்தப்படுவது உசிதம். 10. கீர்த்தனங்கள் எழுதுவதற்குத் தமிழும் தகுந்த பாஷையாதலால் சங்கீதக்கச்சேரிகளில் பெரும்பான்மையான பாடல்கள் தமிழிலேயே பாடப்படவேண்டும்; அவ்வாறு செய்வதால் தமிழ்க் கீர்த்தனாசாரியர்களுக்கு ஊக்கமேற்படும். 11. தமிழ்நாட்டில் வழங்கும் கதைகளையும் நாட்டுப்பாடல்களையும் திரட்டி ஒருபுத்தகமாக வெளியிடவேண்டியதவசியம். 12. S. S. L. C. (ஸ்கூல்பைனல்) வரையிலாவது எல்லாப் பாடங்களையும் (ஆங்கிலத்தைத் தவிர்த்து) கட்டாயமாகத் தமிழில் கற்றுக்கொடுத்துப் பரீக்ஷிக்கவேண்டும். 13. தமிழ் ஜில்லாக்களிலுள்ள எல்லாக் கிராமங்களிலும். புத்தகாலயங்கள் ஏற்படுத்தவேண்டும்; ஸ்தல ஸ்தாபனங்கள் இவ்விஷயத்தில் உதவி புரியவேண்டும்.

14. * தமிழ்நெடுங்கணக்கில் 216 எழுத்துக்களில் பல எழுத்துக்கள் உபயோகமற்றவையாயும், அச்சுக் கோப்பவர்களுக்கு வீண் சிரமத்தை உண்டுபண்ணுகின்றவையாயும் இருக்கின்றன. மேலும், சில சப்தங்களுக்குச் சரியான எழுத்துக்களுமில்லை. ஆதலால், வேண்டாத எழுத்துக்களை நீக்கி வேண்டிய எழுத்துக்களைச் சேர்க்க வேண்டும்.

* இதை யாதரித்துப் பேசிய மகாநாட்டு இலங்கைப் பிரதிநிதி ஸ்ரீமான். ஏ. எஸ். ராமசுவாமி, இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்து அறிக்கைதயாரிப்பதற்காக ஸ்ரீமான்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டி. கே. சிதம்பரநாத முதலியார், கா. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோரை அங்கத்தினராகவும், ஸ்ரீமான். பி. என். அப்புசாமி ஐயரைக் கூட்டத்தைக் கூட்டுபவராகவும் கொண்ட ஒரு சபையை யமைக்கவேண்டுமென்று பிரேரித்தார்: தீர்மானம் நிறைவேறியது.

15. ஜாதி வேற்றுமைகளை உண்டு பண்ணக்கூடிய நூல்கள் பள்ளிக் கூடங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்படவேண்டும் என்ற ஒரு தீர்மானமும் நிறைவேறியதாம்.

நிராகரிக்கப்பட்ட பிரேரணை:

"அறிவு வளர்ச்சிக்கென்று சிறுவர்களுக்காக ஏற்படுத்தப்படும் பள்ளித் தமிழ்ப் புத்தகங்களில் பகுத்தறிவுக்கும் தன்னம்பிக்கைக்கும் முரண்பட்ட கடவுள்வாழ்த்துப் போன்ற கடவுளைப்பற்றிய குறிப்பு இருத்தல் கூடாது." என்பது.

---

## சிவநேசனுக்கு வாழ்த்து.

(கண்டாச்சிபுரம் திருவாளர் A. முத்தைய பிள்ளை அவர்கள்.)

1. நக்கன தருளால் நற்றமிழ் செறிய நாட்டினிலெண்
டிக்கவர் மதிக்கத் திகழ்தரு மெங்கள் சிவநேசா!
சர்க்கரைப் பாகுந் தேனொடு பழமுந் தனிப்பாலும்
மிக்க விரும்பார் நின்சுவை பருகும் மேலோரே.

2. மேலவர் பலவான் குடியினில் விளங்கு மெய்ஞ்ஞானச்
சீலவர் ராம சாமி வளர்க்குஞ் சிவநேசா!
எலுறு நின்னெழில் காண்டொறு மென்கண் இணையில்லா
மாலுறு காதல் வளர்க்கிற தெனினின் வளமென்னே.

3. கற்றவர் விரும்புங் கற்பகக் கனியே கண்டேயென்
சிற்றறி வினிலுந் தித்தித் தூறுஞ் சிவநேசா!
மற்றொரு குறைவில் லாதொளிர் கதிரும் மதியும்போல்
உற்றுபல் லாண்டுபல் லாண்டெனப் பூவி லொளிர்வாயே.

4. திருவளரு மிந்தியத் தேசத்த வர்க்கெலாஞ்
செய்தவப் பயனாகியும்
சீருற்று பேர்பெற்று செந்தமிழ் வளர்த்திடு
திறம்பல படைத்ததாயும்
மருவினிய ராமசா மிப்பெயர் படைத்துபல
வான்குடி யமர்ந்தவள்ளல்
வளர்க்கமதி தோறுமுதல் மதிநாளில் வந்தன்பர்
மனமா சகற்றுவதுமாய்
மருவுமகி ழாதிமலர் வாசத்தி னுந்தமிழ்
மணமுலகில் வீசுவதுமாய்
வாரிச மடந்தையருள் வாய்த்ததுவு மாய்மகிழ்
வழங்குசிவ நேச னுகும்
ஒருமையுட னித்தகைய புகழெலா மூலவாம
லோங்கநீ டூழி யாக
ஓங்கசந் தாதாரர் ஓங்கபத் ராசிரியர்
ஓங்கசிவ னருளோங்கியே.

"சிவநேசன் நீடு சிறந்தவா ழியவே!"

உ

# அவனன்றி ஓரணுவும் அசையாது.

---

(திருவல்லிக்கேணி திரு. நல். கண்ணப்ப முதலியாரவர்கள்)

அகரம் எழுத்துக்களிலேறி அவ் வெழுத்துக்களை யியக்குவது வியாபக மாதல்போல், சிவம் சிற்சடங்களி னிறைந்து அவைகளை யியக்குவது அச் சிவத்தினது வியாபகம். இவ் வுண்மை யோதாவே,

"சிற்பிரம்பா லுற்றவடு மேவவுல கெங்குநிறை
சிற்பரனே தெய்வம் சிவசிவா—சொற்சிறந்த
அகர முதலவெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

என மேலோர் பிரகாசம் பண்ணியிருக்கின்றனர்.

சிவபெருமான் கிராத வேடங்கொண்டு அர்ச்சுனனால் வில்லடி பட்டும், ஓட்ட வேடங்கொண்டு அரிமர்த்தன பாண்டியனாற் பிரம்படி பட்டும், அவ்வடித் தழும்புகள் சராசரங்களாகிய யாவும் பட்டு வருந்துமாறு திருவுள்ள மிசைந்து, சிற்சடப் பிரபஞ்சம் யாவும் தமது திருமேனி யென்பதை யினிது விளக்கினர். அன்றியும்,

"எல்லா வுயிர்க்கு முயிரு ணைச ரிவரசையி
னல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மாற னிருக்கவும் யோகம் விளைத்தவந்நாள்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே."

என்னுந் திருவாக்கால் எல்லா வுயிர்களுக்கும் யோக போகங்களைக் கொடுத்து இயக்குகின்றவர் முழுமுதற்கடவுளாகிய சிவனே யென்றுபெறப்படுகின்றது. சிவபெருமான் யோகமிருந்த காலத்தில் மன்மதன் இரதியுடனிருந்துஞ் செயலற்றுக் கிடந்தான். சசியோடு கூடிய புரந்தரனும், வாணியோடு கூடிய பிரமனும், இலக்குமியோடு கூடிய திருமாலும் காமமற்றுக் கலவியொழிந்து காலங் கடத்தினார்கள். இது சித்தமாகையால் சிவனே யாவரையு மியக்குகின்றவ ரென்பது ஸ்திரமாயிற்று. சிவனாரது திருக்கண்களை யொரு காலத்துப் பிராட்டியார் லீலாமாத்திரமாய்த் தமது திருக்கரங்களான் மூடினர். அப்போது சோம சூரிய அக்னிகளாகிய வெல்லாச் சுடர்களு மொளி மழுங்கி யிருண்மூடி யுலகந் தடுமாறிப் போய்விட்டது. அப்போது தமது நெற்றிக்கண்ணைத் திறந்து உலகம் நிலைபெறச் செய்தருளினர். இத்திவ்ய சரித்திரமும் சிவனே யுலகத்தை யியக்குகின்றவ ரென்னு முண்மையைப் பிரகாசிப்பிக்கின்றது. இம்மட்டோ: இந்திரன் முதலிய தேவர்கள் சிவபெருமான் தமக்குத் தலைவ ரென்பதை மறந்து அகங்கரித்தார்கள். அப்போது சிவபெருமான் ஒரு யக்ஷரூபந்தாங்கி

இந்திரன் முன் சென்று ஒருன்னத ஸ்தானத்திலிருந்தனர். இந்திரன்கோபித்து நீ யார் என்றுகேட்டான். அதற்கு அவர் பயமற்று நீ யாரென்று இந்திரனைக் கேட்டார். அவன் கிலேசமுற்று மயங்கினன். அப்போது அவனைப்பார்த்து அங்கிருந்த ஒரு துரும்பை யெடுத்து அவன் முன்னேபோட்டு, இதைக் கொஞ்சம் அசைத்திடு பார்ப்போமென்றனர் யக்ஷர். இந்திரன் அத்துரும்பை அற்பமாக வெண்ணி அசைக்கப்பார்த்தான். அஃது அவனுடைய சக்தி முழுதையும் கவர்ந்து அவனே ஒரு துரும்பு போலக் கீழே வீழ்ந்திடச் செய்தது. இந்திரன் வெட்கமடைந்து இனி யென்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது அக்னி அங்கே வந்து யக்ஷா! நீ யாரென்று அதட்டிக் கேட்டான். அதற்கு யக்ஷமூர்த்தி நீ யாரென்று அக்னியைக் கேட்டார். நான் திரிலோகங்களையும் நீறுக்கவல்லவன்; உன்னையும் கொளுத்த வல்லவன்; அகங்கரியாதே யென்று அக்னி கூறினான். ஆயின், இந்தத் திரணத்தை மாத்திரம் கொஞ்சம் சுட்டு நீறுக்குதி பார்ப்போமென்றனர் யக்ஷர். உடனே அந்தத் திரணத்தை அக்னி பரிசித்தான். அது பிரயோசனப்படவில்லை. அதனால் அக்னி கோபங்கொண்டு தனது சப்தஜ்வாலைகளுந் தோன்ற வியாபித்து அதனைக் கொளுத்தப்பார்த்தான். அப்போது மத்திரணம் நெருப்புக் கிரையாகாமல் நின்றது. அக்கினி பரிபவமெய்தி வருந்திக்கொண்டிருக்கையில், வருணன், வாயு முதலானவர்களும் அங்கு ஒவ்வொருவராக வந்து யக்ஷமூர்த்தியை யெதிர்த்துத் தமது சாமர்த்தியங்களைக் காட்டினார்கள். இவர்களும் பரிபவமுற்று வருந்துகையில், பிரமன் அங்கு வந்தான். பிரமனது வருகையைக் கண்ட யக்ஷமூர்த்தி புன்னகைகாட்டி இறுமாந்திருந்தனர். பிரமன் இடருழந்த யக்ஷமூர்த்தியைப் பார்த்து நீ யாவனென்று கேட்டான். அதற்கு நீ யாவன் யென்றனர் யக்ஷர். நான் திரிலோகத்தையும் படைத்தவன். நானே யெல்லா வுயிர்களுக்கும் பிதாவாயுள்ளவன் என்றான் பிரமன். நீ யாவரையும் படைத்த கர்த்தாவாயின் என்னை நீ படைத்ததுண்டோ வென்றனர் யக்ஷர். அதற்குப் பிரமன் மயங்கியபோது அவனைப்பார்த்து நீ சிருஷ்டி கர்த்தாவாயிருப்பது பின்னாகட்டும்; இப்போது இந்தத் துரும்பைக் கொஞ்சம் அசைத்திடு பார்ப்போமென்றனர் யக்ஷர். பிரமன் அந்தத் துரும்பை அசைக்கமுடியாமல் தனது பலம் குன்றி மூர்ச்சித்து வீழ்ந்தான். பின்பு விஷ்ணு அங்கு வந்தார். விஷ்ணுவைப் பார்த்து நீ யாவன் யென்றனர் யக்ஷர். நான் சர்வலோக ரக்ஷக கர்த்தா; என் பெயர் விஷ்ணு வென்றார் அத் திதி கர்த்தா. நீயே லோக ரக்ஷகனாயிருப்பது நிஜமாயின், எமக்கென்றாவது ஒரு துளி நீரேனும் பருகக்கொடுத்து எம்மை ரக்ஷித்ததுண்டோ வென்றனர் யக்ஷர். விஷ்ணு மயங்கி நமது கதி யிப்படி யாயிற்றே யென்று யோசித்துக்கொண்டிருக்கையில், அவரைப் பார்த்து நீ லோக கர்த்தாவா யிருப்பதைப்



பின்பு பார்த்துக் கொள்ளலாம்; இந்தத்துரும்பை நீயாவது கொஞ்சம் அசைத்திடு பார்ப்போமென்றனர் யக்ஷர். விஷ்ணுவுக்கு ஒன்றுந் தோன்றாமல் யோசித்துக்கொண்டிருக்கும்போது, லோக மாதாவாகிய உமாதேவியார் அங்கெழுந்தருளினர். அவரைப்பார்த்த மாத்திரத்தில் யாவரும் பயந்து எழுந்து நமஸ்கரித்து நின்றார்கள். அப்போது தேவியார் விஷ்ணுவைப் பார்த்து இந்த யக்ஷமூர்த்தி எமது பதியாகிய சிவனன்றோ வென்றுசொல்லி மறைந்தருளினர். உடனே யக்ஷமூர்த்தியு மறைந்தருளினார். சிவபெருமானது திருவிளையாடலை யறிந்த தேவர்கள் தங்களது அகந்தை விலகித் திருவருளைச் சிந்தித்து வாழ்ந்தார்கள். இச் சிவமகிமை வேதத்திலும், சூதசங்கிதை முதலிய புராணங்களிலும் பிரகாசம் பண்ணப்பட்டிருக்கின்றது. இதனால், சிவபெருமான் திருவுள்ள மிசையாதபோது ஓரணுவும் அசையாதென்பது சத்தியமாயிற்று. சிவனியக்குவித்தாலன்றி அசேதன மசையாதென்னு முண்மையே இதனால் வியக்த மாகியது.

பிரமன் சிருட்டி கர்த்தாவாயிருப்பதும், விஷ்ணு திதி கர்த்தாவா யிருப்பதும், ஏனைய தேவர் முதலினோர் தத்தங் கருமங்களை நடத்துவதும் சிவனது திருவாணையின்படியே யன்றி வேறில்லை.

"மனவாக்குக் காயமுயிர் மன்னியசைப் பானும்
அனமாதி போகமளிப் பானும்—நனவாதி
கூட்டிவிடு வானுமுத்தி கூட்டிடுவா னும்பிறப்பில்
ஆட்டிவிடு வானும் அரன்." (சிவபோகசாரம்)

---

## இப்படிக் கிடப்பவள் எப்படிப் பெறுவாள்?

தமிழ் நாவற் பிரியர் பலர் ரங்கராஜு என்னும் நாவலாசிரியரை அறிவர். நாவல் எழுதுவதில் அவர் ஒரு சமர்த்தரென அப்பிரியர் அவரை மதிப்பது முண்டு. அவர் தாம் எழுதிய 'ராஜேந்திரன்' என்னும் நாவலில், ராஜேந்திரன் என்னுங் கதாநாயகன் லக்ஷ்மி யென்னுங் கதாநாயகியை மருந்தால் மயக்கிக் கலவிசெய்தானெனவும், அக்கலவியொன்றானேயே அவள் கருத்தாங்கிப் பிள்ளைபெற்றாளெனவுங் கூறுகிறார். 17-10-33 'ஆனந்தபோதினி' யில் 'கைம்பெண் கமலா' என்ற கதையெழுதிய கி—ரா—என்பவரும், கமலா என்பவளை ராஜா என்பவன் மருந்தால் மயக்கிப் புணர்ந்தானெனவும், அப்புணர்ச்சி யொன்றானேயே அவளுங் கருத்தாங்கிப் பிள்ளை பெற்றாளெனவும் அக் கதையிற் கூறுகிறார். மருந்தால் மயங்கிப் பிரக்ஞையற்றுக் கிடப்பவளுக்குச் செந்நீர் இளகுமா? இளகாதே. அப்போது அவள் கருத்தரிப்பது எப்படி? உடற்கூற்று நூலுக்கும் இன்ப நூலுக்கும் விரோதமாக எழுதப்படும் அத் தகைய கதைகளால் யாருக்கென்ன பயன்?

மெ. குப்புசாமிப் பிள்ளை.

---

# சோழன் கரிகாலன்.

(யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களவர்கள்.)

பூர்வத்திற் காஞ்சிநகரத்திலே தண்டகன் என்பவன் அரசாட்சி செய்துவந்தான். அவன் ஒருதினம் வேட்டையாடி யிளைத்து, நீர்வேட்கையால் வருந்திப் பார்க்கவ முனிவருடைய ஆச்சிரமத்தை யடைந்தான். அங்கே இருந்த முனிபத்தினியார் செய்த விருந்தினால் வேந்தனுடைய பசிவருத்தம் நீங்கிற்று. தண்டகன் பழிபாவம் ஒன்றும் நோக்கானாய் முனிபன்னியைச் சேர விரும்பி, அவளுடைய கையைப்பற்றி யிழுத்தான். அவள் அழுது பதறினாள். அப்பொழுது காட்டினின்றுந் தருப்பை யாதியவற்றோடு வந்த முனிவர் அதனைக்கண்டு "பழுதற்ற கற்பினையுடைய எனது மனைவியை விரும்பிய தண்டகனே! நீ அலியுருவ மாகுதி; உன்னை விலக்காது விட்ட அமைச்சனும் வேடனாகக் கடவன்; செல்வமெல்லாம் ஒழிக" என்று சாபமிட்டார். அவர்கள் முனிவருடைய பாதங்களில் விழுந்து வணங்குதலும், 'நீங்கள்செய்த குற்றத்தினால் காஞ்சியும் தீர்த்தம் சிவாலயம் அன்றி மற்றெல்லாம் காடாகுக. சிவபெருமானது திருவருளினால் கரிகாலன் சோழநாட்டில் அவதரித்து இங்கே வருவான்; அவனைக்காணில் உங்களுக்கு இந்தச்சாபம் நீங்கும்' என்றுகூறி, அவ்விடம் நீங்கிச் சென்றார். மன்னன் அலியுருப் பெற்றான். அமைச்சன் வேட்டுவ வுருப் பெற்றான். காஞ்சியும் வனமாயிற்று.

"தண்டகற் கெண்டிசை யரசு, தன்னையீந் திடலாற் றண்டக புரமாந் தனிப்பெயர் பெற்றதத் தனியூர்." (கந்த பு: நகரப்படலம்)

பின்பு, சிவபெருமானுடைய கட்டளைப்பிரகாரம் மண்ணுலக ராசன் ஒருவனுக்கு விண்ணுலக ராசனாகிய இந்திரன் புத்திரனாகப் பிறந்தான். புத்திரனாகிய கரிகால்வளவன் பிதாவினால் உரியகாலத்தில் உபநயனஞ் செய்யப்பெற்றுக் குசநாபர் என்னும் முனிவரிடத்திலே கலைகள் பயின்றுவருநாளிலே, தந்தை யிறக்கத் தாயும் சககமனஞ் செய்தாள். அமைச்சர்கள் அரசனின்றி மனந் தளர்ந்தனர். அப்பொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே "அரசனுடைய புத்திரன் இருக்கின்றான்; அரச யானையை அவிழ்த்து விடுமின்; அஃது அவனைக்கொணரும்." என்றெழுந்த அசரீரி வாக்கைக் கேட்டுத் திருவருளைத் துதித்து யானையை அலங்கரித்து விடுத்தார்கள். அவ்வியானை எதிர்ப்படும் அரசர் யாரையும் விலக்கி, ஆச்சிரமத்திலிருந்த அரசகுமாரனை வணங்கித் தனது முதுகின்மேற்றாங்கி அவர்களுக்கு உதவியது. அவன் முடிசூடப்பெற்று பார்க்கவ முனிவருடைய சாபத்தினாலே காடாய்க் கிடந்த காஞ்சியை நகராக்க விரும்பிச் சேனைகளோடு சென்றான். செல்லும்பொழுது சாபமேற்று வேடராயிருந்த சிந்துமேதன் மாமேதன் இருவருங் கோபங்கொண்டு சேனைகளோடு எதிர்த்தார்கள். கரிகாலன் அதனை அறிந்து விரைந்து சென்றான். அவனைக் கண்டவுடன் சிந்துமேதனும் தண்டகனும் சாபம் நீங்கி முன்னுருவம் பெற்றார்கள். அரசனும் மகிழ்ச்சிபெற்று அவர்களோடும் அளவளாவிக் காஞ்சியை யடைந்து கம்பைநதியிலே ஸ்நானஞ் செய்து, ஏகாம்பரநாத சுவாமியைத் தொழுது விடைபெற்றுக் காமக்கோட்டத்தை யடைந்து அம்மையாரையும் வணங்கி,



அவரது கிருபையினால் அவர் வளர்த்த முப்பத்திரண்டு தருமசாலைகளையும் பொன்னாலும் மணியாலும் செய்து புதுக்கி, மாசித் திங்களில் வரும் மகத்தில் ஒரு வெற்றித் தம்பத்தையும் நகரின் மத்தியில் நாட்டினான். பின்பு சிற்பநூல் விதிப்படி மதில் முதலியவற்றை அமைத்துக் குடியேற்றிப் பிறவற்றையுஞ் செய்தான். பின்பு, கரிகாற்சோழன் காமாக்ஷி அம்மையாருக்கும் ஏகாம்பரேசுரருக்கும் பூசை உற்சவங்களை நடாத்திப் பூமியை அரசாட்சி செய்து வாழ்ந்திருந்தான்.

இவ்வரலாறு காஞ்சிப்புராணம் நகரேற்றுபடலத்திற் காணப்பட்டது.

கச்சியப்ப சிவாசாரியர் காஞ்சியை வருணிக்குமிடத்து 'தண்டகனும், அண்ணலங் கரிகால் வளவனும் பிறரு மரசுசெய் தளித்ததந் நகரம்' எனக் கூறியருளினர்.

"என்று முள்ளவிந் நகர்கவி யுகத்தி
விலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி யிமயமால் வரைமேல்
வைக்க வேகுவோன் றனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதநான் குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிச்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும்."

எனப் பெரியபுராணத்தில் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்திலே வருவதூஉங் காண்க.

கரிகாற்சோழன் பொருநராற்றுப் படைக்கும், பட்டினப் பாலைக்கும் தலைவன். இவன் பட்டினப்பாலையைக் கேட்டுப் புலவர் பெருமானாகிய உருத்திரங் கண்ணனாருக்குப் பதினாறுநூறாயிரம் பொன் பரிசாகக்கொடுத்தானென்று கலிங்கத்துப்பரணி (இராச பாரம்பரியம் செ-21) கூறுகின்றது.

இவன் முறைசெய்ய அறிவு நிரம்பாத இளைஞன் என்றிகழ்ந்த நரைமுது மக்கள் உவக்கும்வகை நரைமுடித்து வந்து முறைவேண்டி வந்த இருதிறத்தாருஞ் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறைசெய்தான் என்று பழமொழி (செ-21) செப்புகின்றது.

உரைமுடிவு காணான் இளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்."

## அமங்கிலிகள்.

தாலி யில்லாப் பெண்டிர், அறுதலிகள் என அமங்கிலிகள் இருவகை. தாலிகட்டிக் கொள்ளாமலே புணரும் பெண்டிர் தாலியில்லாப் பெண்டிர். கணவன் செத்ததும் தம் கழுத்துத் தாலியை அறுத்தெறிந்த பெண்டிர் அறுதலிகள். தமிழகம் அறுதலிகளைக் கைம்மை நோன்பெடுக்கும் உத்தமிகளென மதிக்கும்: ஆனால், தாலியில்லாப் பெண்டிரை வைப்பாட்டிகளென அவமதிக்கும். ஆகையால், தமிழகத்துப் பெண்டிர் தாலிகட்டிக்கொண்டே கட்டியவனைப் புணர வேண்டுமென்பதறிக. (க. ராஜமாணிக்கப் பிள்ளை.)

௨

# உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

---

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும், சௌந்தர பாண்டியன் எனுந்திரு நாடனும், சங்கப் புலவருந் தழைத்தினி திருந்து தமிழாராய்ந்தது, காண்டகு சீர்த்திப் பாண்டிநன் னாட்டில், மாடமாளிகைசூழ் கூடல் மாநகரமாகும். இக் கூடல்மா நகரிற்குத் தென்கீழ்த்திசையிற் சிறப்புற்று விளங்குவதாகிய மோசிகுடி என்னும் ஊரே, இப்புலவர் பிறந்த இடமாகும். இத்தலம், மோசிகீரனார், மோசி கண்ணத்தனார், மோசிசாத்தனார் முதலிய புலவர் பெருமக்கள் பலர் பிறக்கத் தவமியற்றிய தலமாகும்.

இத்தகைய திருத்தலத்தில், தினமும் முத்தீ சிறப்புற வளர்த்தலைச் சொந்தமாகக் கொண்ட அந்தணர் குலத்தில் இப்பெரியார் தோன்றினார். இவர், பிறக்கும் பொழுதே ஊழ்வினைப் பயனால் காலில் முடமுடையராக இருந்தாராதலின், இவரது ஊர்ப்பெயரும் தோன்ற முடமோசியார் என இவரை அழைக்கலாயினர். உலகத்தில் பெரும்பாலும் ஒருவன் சரீர வுறுப்புக்களி லெவையேனும் ஒன்று குறைந்தவனாக இருப்பானாயின், அக்குறையை நிறைவாக்குவதற்கு அவனைச்சிறந்த அறிவாளியாக அமைப்பது இறைவனது திருவருளாகும். அதுபோலவே, இப் புலவரும் காலில் முடமுடையரா யிருந்தும், கல்வியறிவில் முடமுடையா ராகாது, செவ்விதிற் கற்றுச் சிறப்புறு புலவராக விளங்கினார்.

கல்வியறிவால் நிரம்பப்பெற்ற உள்ளத்தை யுடையரான இவர், தமது கவியின்பத்தைப் பாண்டிநாட்டிற் பண்புறப் பரப்பினர். ஏனைய நாடுகளிலும் பரப்புதற்கு எண்ணங் கொண்டாராய்ப் புறப்பட்டுச் சோழநாடு செல்லநினைத்து உறையூரை அடைந்தனர். அக்காலத்து அங்கு அரசு செலுத்தியவனாகிய சோழன் முடித்தலைக்கோப் பெருநற் கிள்ளி யென்பான் புலவரைக்கண்டு அளவிலா ஆனந்தங்கொண்டோனாய் வரவேற்று உபசரித்தான். பின்னர், அரசன் புலவரது சிநேக வின்பத்தைப் பெறவிரும்பிச் சின்னாட்கள் உறையூரிலே தங்கிச் செல்லும்படி புலவரை வேண்டினன். புலவரும் அரசனது கருத்திற் கியைந்து, அந்நகரத்தின் ஒருபகுதியாகிய ஏணிச்சேரியை அடைந்து வசித்துக்கொண்டு, நாள்தோறும் அரசனது சபைக்குச் சென்று, அவனுக்குச் செந்தமிழ்க் கவியாகிய தேவாமிருதத்தை ஊட்டிவந்தார்.

அரசனும் மகிழ்ந்து புலவர்க்கு வரிசைகள் பல வழங்கிவந்தான். சில நாட்கள் சென்றபின், புலவர் அரசனை நோக்கி 'அரசே! சேரநாடுசென்று அந்நாட்டரசனைக் காண என் மனம் அவாவுகின்றது. ஆதலின், சேரநாடு செல்ல விடைதரவேண்டும்.' என்று வேண்டினர். அரசன் புலவரை விட்டுப்பிரிய மனமில்லாதவராயிருந்தும், அவரது வேண்டுகோளை மறுத்தற்கஞ்சியவனாகி, அவரது எண்ணப்படியே சேரநாடு செல்ல விடை கொடுத்துச் செல்லவிட்டனன்.



புலவர் சேரநாடுசென்று கருவூரை யடைந்து, அதுபோழ்து அந்நாட்டை ஆண்டவனாகிய 'சேரமான் அந்துவஞ் சேரலிரும்பொறை' என்னும் அரசனைக் கண்டார். புலவர்களை உயர்த்தலே பொருளாகக் கொண்ட சேரன், முடமோசியாரைக் கண்டதும் எதிர்சென் றழைத்து இன்சொற்கூறி உபசரித்து அவரது நட்பை விரும்பியவனாகி யிருந்தனன். அவ்வாறே புலவரது உள்ளமும் சேரனது நட்பை நாடி நின்றமையால், இருவருள்ளத்திலும் நட்புப்பயிர் பெட்புற வளர்ந்தது. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என ஒரு பழமொழி உண்டு. பண்டைக்கால அரசர்களெல்லாம் இப் பழமொழியைப் பொன்னெனப் போற்றினர். சோழன் கூறியவாறே சேரனும் புலவரைச் சின்னாட்கள் தம்மிடமிருந்து கவியமு தருத்த வேண்டுமென்று வேண்டினன். புலவரும் அதற்கிணங்கி அரசவைக்களத்தி லமர்ந்து அரசனது கருத்துப்படி நடந்து வந்தார்.

இவ்வாறு இருக்கும் நாளில் ஒருநாள், சேரனும் முடமோசியாரும் நகரத்திற்குப் புறப்பக்கத்தே சிறந்து விளங்கிய 'வேண்மாடம்' என்னும் மாளிகையின் உப்பரிகையிலிருந்துகொண்டு, செந்தமிழ் மொழியின் தெய்வத்தன்மைகளையும், அருமை பெருமைகளையும் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி சோழநாட் டெல்லைப்புறத்தில் யானை யூர்ந்துவர, அது திடீரென மதங்கொண்டு கூடவந்த வீரர்கள் வேண்டியவரை தடுத்துங் கேட்காது பக்கங்களிலும் பின்புறத்திலும் வீரர்கள் சூழ்ந்து ஓடிவர, கருவூரின் எல்லையை அடைந்தது. இங்ஙனம், கையில் வேலும் வாளும் வில்லும் உடையரான வீரர்கள் புறத்தே சூழ விரைந்து ஓடிவரும் யானையின்மே லிருந்த சோழனைக்கண்ட சேரன், யாரோ வேற்று நாட்டு வேந்தன் தன்னோடு போர் செய்தற்கு வருகின்றானென வெண்ணிக் கோபம் மிகுந்தவனாய்ப் புலவரை நோக்கிப் 'புலவீர்! இக் களிறூர்ந்து வருவோன் யாவன்?' என வினவினான். கேட்ட புலவர், அரசனது கோபக்குறியை உணர்ந்தவராய், அதனை நீக்குதற்கு நினைத்து, சோழனை முன்னரேயே அறிந்தவராதலால், அரசனைநோக்கி, 'மன்ன! இங்ஙனம் களிறூர்ந்து வருபவனாகிய இவன், உன்னோடு பொருதற்கு வருபவ னல்லன். தன்னாட் டெல்லையில் களிறூர்ந்து வருங்கால், அது மதங்கொண்டு புடையினராகிய வீரர்கள் அடக்கவும் அடங்காது விரைவாக வருகின்றது.' என்னுங் கருத்தமைந்த

"இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
வெய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பட் டிங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி

கழனி யுழவர் சூட்டொடு தொகுக்குங்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே."

என்னும் செய்யுளைக் கூறினர். புலவரது சொற்களைக் கேட்டசோழன் கோபம் நீங்கினன். திருவருளால் யானையின் மதம் நீங்கியதால் சோழன் சுகமாகத் தன்நகரை யடைந்தான்.

இங்ஙனம் சேரனிடம் சிலநாட்கள் இருந்து, பின்பு தன்னாடு செல்லக் கருதியவராய்ச் சேரனிடம் விடை கேட்டனர். சோழனைப் போலவே சேரனும் புலவரது பிரிவிற்கு வருந்தியவனாகிப் புலவர்க்குப் பரிசில் பல வழங்கி விடை கொடுத்தான். விடைபெற்ற புலவர் பாண்டிநா டடைந்து சோழனாலும் சேரனாலும் கிடைத்த பொருள்களைக் கொண்டு இல்லறவாழ்க்கையை இனிது நடத்திவந்தனர்.

பின்னர், பொதிய மலையின் பக்கத்ததாகிய ஆய்குடி என்னும் ஊரிலிருந்து அப்பகுதியை ஆண்ட வேளிர் குலத்தவனாகிய ஆய் என்னும் வள்ளலை யடைந்து அவனைக் கண்டார். புலவர்க்குக் களிறும் தேரும் பொன்னும் மணியும் கொடுக்கும் வள்ளியோனாகிய ஆய், மோசியாரிடத்து அன்பு மிக்குடையோனாய் அவரை வரவேற்று உபசரித்தான். அவனது கொடைத் திறத்தைக் கண்டபுலவர் வியந்து கூறிய செய்யுட்கள் பல. அவற்றுள்,

"விளங்குமணிக் கொடும்பூ ணாஅய் நின்னாட்
டிளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ
நின்னுநின் மலையும் பாடி வருநர்க்
கின்முகங் கரவாது வந்துநீ யளித்த
வண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே."

என்ற செய்யுள் அவனது போர்த்திறம் கொடைத்திறம் இரண்டையும் பொற்புடன் விளக்குவதாகும்.

ஆய், தன்னிடத்து வரும் புலவர்களுக்கெல்லாம் அளவில்லாத செல்வங்களை அளித்தமையால், மலையனைய அவனது செல்வம் குறையத் தலைப்பட்டது. வறுமைப்பிணி அவனைப் பீடிக்கச் சமயம் நோக்கியிருந்த அக்காலத்தும் சிறிதும் சலிப்பில்லாதவனாகி, வேண்டுவார் வேண்டுவதை இல்லையென்னாது அளித்துவந்தான். அதனால், அவனது திருமாங்கல்யம் தவிர ஏனையவெல்லாம் ஒழிந்தன. இவ்வாறு இருந்த நிலையில் ஆய், மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகவாழ்வை அடைந்தான். அதனால், மிக்க வருத்தம் உடையரான மோசியார் தம்மூர் சென்று தங்கிச் சிலநாட்களில் ஆய் சென்ற விண்ணுலகத்தை அடைந்தார்.

இச் சரிதத்தால், பண்டைக்கால அரசர்கள் புலவர்களிடத்துச் சிறந்த மதிப்பு வைத்திருந்தார்களென்பது முதலியன தெற்றென விளங்கும்.

# * இந்துமதக் கொள்கைகளும் சுகாதாரங்களும்.

பண்டைப் பெரியோர்கள், இந்தியர்களாகிய நாம் இன்னின்னமுறையில் நடந்துக்கொள்ள வேண்டுமென்பதை வகுத்துள்ளார்கள். அவை பெரும்பாலும் நம்முடைய தேகாரோக்கியத்தைப் பொறுத்தவே. அவைகளின் உண்மைக் கருத்துக்களை விளக்கமாக அறிந்து நடந்துகொள்ளாமல் மேனாட்டவர்களின் நடையுடை பாவனைகளைச் சிறந்த முறையெனக் கொள்வது முற்றும் பிசகு. நம் முன்னோர்கள் நம் நாட்டின் சீதோஷ்ண நிலையை யுத்தேசித்தே ஒவ்வொரு கொள்கைகளையும்ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேனாட்டார்களின் சரீரம் வெண்மையாகவும் நம்மவர்களின் சரீரம் கருமையாகவும் இருக்கக் காரணம், அந்தந்த நாட்டின் சீதோஷ்ண நிலையே. நாம் நமது வீட்டுத் தோட்டங்களில் பயிரிடும் மரம், செடி, கொடிகளுக்குத் தினந்தோறும் நீர் பாய்ச்சுகிறோம். காடுகளிலுள்ள மரம், செடி, கொடிகளுக்குத் தினந்தோறும் ஜலம் விடுவோர் ஒருவருமில்லை. ஆயினும், அவைகள் நாட்டி லுள்ளவைகளைவிடச் செழிப்பாக வளர்கின்றன என்றெண்ணி, நாட்டிலுள்ள செடி கொடிகளுக்கு 'ஒருதினம் தண்ணீர் விடாதிருப்பின் காய்ந்து மடிந்துபோகின்றன. அதுபோலவே, மேல் நாட்டார்களின் கொள்கைகளைப் பின்பற்றி நம்நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைவிட்டால் நாம் துன்பமடைவோமென்பதிற் சந்தேகமில்லை. நம் நாட்டுச் சகோதர சகோதரிகள் நோயற்ற வாழ்வை யடைய வேண்டுமானால்—நமது சமூகமும் நாடும் முன்னேற்றமடைய வேண்டுமானால், நம் முன்னோர்களால் விதிக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றி யொழுகுவதே சிறப்பாம். இனி, நம் முன்னோர்கள் விதித்த ஒவ்வொரு கொள்கையிலுமுள்ள சுகாதாரங்களை ஆராயத் தொடங்குவாம்.

1. அதிகாலை விழிப்பு:—அதிகாலையில் நித்திரைவிட்டு எழுவோர் தேகத்திலுள்ள நரம்புகளெல்லாம் நன்றாய் வலுத்துத்தேகாரோக்கியமும், புஷ்டியும், சுறுசுறுப்பும் கொண்டு நல்வாழ்வடைவர். அதிக நேரம் உறங்குவோர் வாழ்விலும் உறக்கங் கொண்டவரேயாவர். 'தூக்கமே சோம்பலின் அஸ்திவாரம்' 'நித்திரை சத்துரு' 'சோம்பலே சுகத்திற்குக் கேடு' எனப் பெரியோர்கள் கூறியபடி அதிகநேரம் தூங்குபவர்கள் சோம்பல் மிகுத்துத் தொழிலிற் சோர்வடைந்து கால் குடைச்சல், கைகுடைச்சல், சோகை, இடுப்புவலி முதலிய நோய்வாய்ப்பட்டு, அதனால் சரீரம் மெலிவடைந்து அடிக்கடி வைத்தியரைத் தேடவேண்டி வருகிறது. இக்காலத்திலோ அளவில்லாத ஆங்கில வைத்தியர்களும், இந்திய வைத்தியர்களும் மலிந்து கிடக்கின்றனர். அவர்களுக்கு ஓயாது

* கண்டாச்சிபுரம் போர்டு வாசகசாலைத் தமிழாசிரியர் திரு. அ. வடிவேல்பிள்ளை அவர்கள் சுகாதாரக் கொண்டாட்டப் பொதுக்கூட்டத்தில் (12—11—33 ல்) நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம். அவர் துணைவர், திரு. அ. முத்தைய பிள்ளையவர்கள் திரட்டியது.

186935

வியாதியஸ்தர்கள் கிடைக்கின்றனர். காரணம், மக்கள் அதிக நித்திரை கொள்வதாலும், இந்துமதக் கொள்கைகளை நழுவவிட்டதனாலுமே. அக்காலத்தில் பாடசாலைகளிலும் பிள்ளைகளுக்கு அதிகாலை விழிப்பு அவசியம் எனப் பழக்கத்திற்குக் கொண்டு வரவே காலைப் பாடம் ஆரம்பஞ் செய்திருக்கின்றனர். தற்போதிய போர்டு பாடசாலைகளில் பாடம் காலை 9, 10 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதால், மாணவர்களும் எட்டரைமணிவரை தூங்குகிறார்கள். இது மாணவர்களின் கல்வி ஊக்கத்தையும், சுகாதாரத்தையும் கெடுக்கிறது. அதிகாலை மன முதலிய அந்தக்கரணங்கள் சலனமின்றி ஓய்ந்து ஒரே நிலையில் உள்ளநேரம். மற்றை நேரங்கள் உலகவிடய வாதனையிலுழலாநிற்கும். வைகறையில் புத்தியும் மனமும் பொருந்தி நிற்றலால் கடவுளைத் தியானிக்கவும், ஒரு காரியத்தைத் தொடங்கவும், ஒன்றைப் பற்றிச் சிந்திக்கவும் ஏற்றதாகிறது.

“புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
சுத்த நரம்பினாற் றூய்மையுறும்—பித்தொழியும்
தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னுமதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்.”

என மருத்துவ நூலார் கூறியிருக்கின்றனர். இச் சுகாதார முறையை மக்கள் அனுசரிக்க வேண்டுமென்கிற நன்னோக்கத்துடனேயே நமது தமிழ்ப்பேரன்னையாரும் ‘வைகறைத் துயிலெழு’ எனக் கூறினர். அதன்படி நடப்பின் நாம் சுகமே வாழலாம்.

2. சாணந் தெளித்தல்:—தினந்தோறும் வைகறை யெழுந்து மாதர்கள் வாசலிற் கோமயம் சேர்த்துள்ள நீரை இறைத்து விளக்குமாற்றால் விளக்கிய பின்னரே எவரும் வெளிச்செல்ல வேண்டும். அதுவரை எவரும் வெளியே செல்லலாகாதென்பது நம்மேலோர் துணிபு. ஒவ்வொரு நாளும் கோடிக் கணக்கான விஷக்கிருமிகள் பூமியில் உண்டாகின்றன. அவைகள் பகலில் சூரிய உஷ்ணத்தினால் நம்மைப்பற்ற முடியாமல் மாள்கின்றன. இரவு முழுதும் நாம் நித்திரை செய்கிறோமாகையால் வீதியில் சஞ்சாரமில்லாமலும் குளிர்ச்சியாகவுமிருக்கிறகாலத்தில் தோற்றும் விஷக்கிருமிகள் அதிகாலையில் வெளியேறும் நம்மைப்பற்றிக் கெடுதியை உண்டாக்கும். கோமயத்தில் விஷக்கிருமிகளைக் கொல்லும் சக்தியிருப்பதால் அந் நீர் பட்டதும் அவைகள் மாண்டுபோகின்றன. ஆதலால், வாசலில் கோமயம் கலந்தநீர் தெளிக்கவேண்டிய தவசியமே. ‘எப்பொழுதும் பாதரக்ஷை யணிந்து கொண்டே நடக்கல் வேண்டும்’ என்பதும் அக் கிருமிகள் நம்மைப் பற்றாதிருக்கவே ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். தினேதினே வீடுகளைச்சாணத்தினால் மெழுகுவதால் காற்றின் மூலம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும் விஷக்கிருமிகள் அந் நாற்றம் பட்ட மாத்திரத்தில் இறந்துபடுகின்றன. உண்ட எச்சிற் பாத்திரங்களையும் இடத்தையும் சாண நீரினால் சுத்தி செய்வதால் அப் பாத்திரத்திலுண்டவனுக்குள்ள தொத்துநோய் சம்பந்தமான கிருமிகள் பிறருக்குப் பரவாதிருக்கச் செய்கிறது. உமிழ் நீரிலும் விஷப் பூச்சிகள் இருப்பதால் ஒருவர் எச்சிலை ஒருவர் உண்ணக் கூடாது. அவ் வுமிழ்நீர் பட்ட பாத்திரங்களையோ, அல்லது இடத்தையோ சாணத்தினால் சுத்தி செய்வதால் விஷப்பூச்சிகள் மாளும். நரம்புச்சிலந்தி முதலிய புண்களுக்கு இதைப்பூசுவதால் அந் நோய்க் கிருமிகள் மாண்டு சீக்கிரம் குணமடையச் செய்கிறது. இத்தகைய அரும் பெருங் குணங்களையுடைய கோமலத்தை நம் நாட்டு நவீன நாகரீக நாரீமணிகள் கையினாற் றொடவுங் கூசுகின்றனர். ‘ஹா! என்வீடு சிமிண்ட்பூசிய மாடியாயிற்றே. என்வீட்டில் சாணியிட்டு மெழுகினால் தரையில் படைப்படையாகப் பிடித்துக்கொண்டு விகாரமாயிருக்கும். சுத்த ஜலம் விட்டுத் தரையை மெழுகினால் போதும்’ என்றுகூறி கோமலத்தைக் கொள்வதேயில்லை. அந்தோ! என்னே இன்னோர் மதியீனம்! இம்முறையை வகுத்த நம் ஆன்றோர்களறிவிலிகளா? இனியேனும் இம்முறையைப் பின்பற்றுவார்களாக.



3. திரு நீறணிதல்:—ஸ்நானஞ்செய்தவுடனும் போசனத்திற்கு முன்னும் பின்னும் நித்திரை செய்யத் தொடங்கும்போதும் நித்திரைவிட்டெழுந்ததும் நெற்றியில் நீறணிய வேண்டும். திருநீறணிவதால் சிரசிலுள்ள நீர் ரோகங்கள் நிவர்த்தியாகின்றன. ஸ்நானம் செய்தவுடன் நெற்றியில் நீறணியின் சிரசிலுள்ள நீரைக் கிரகித்து நோய்வராமல் தடுக்கிறது. ஆகாரத்திற்கு முன்னும் பின்னும் விபூதியணிதலால் மோர் தயிர் முதலிய குளிர்ச்சியைத் தரும் வஸ்துக்கள் உதராக்கினியைத் தணித்து ஆவியேறி மூளையைப் பற்றாதிருக்கச் செய்கிறது. சொப்பனாவத்தையைத் தரும் இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளும் புருவமத்தியிலிருப்பதால் நித்திரைக்குப் புகுங்கால் நீறணிந்தால் மேற்கண்ட அவத்தைகள் உண்டாகா. எப்பொழுதும் ஒருவனது நெற்றியில் விபூதியிருக்குமாயின், அவன் சலதோஷம், இருமல், தலைவலி, சுரம் முதலிய நீர் ரோகங்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை. இதனாற்றான் நம் ஔவைப்பிராட்டியார் ‘நீறில்லா நெற்றிபாழ்’ எனக் கூறினர் போலும். நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வமாதலால் சகலரோக நிவாரணியாகிய திருநீறுக்கும் ‘விபூதி’ (மேலான ஐஸ்வரியம்) எனப்பெயரிட்டனர். ‘சமயத்திலுள்ளது நீறு’ “வெந்துயர் தீர்ப்பது நீறு” ‘பூசவினியது நீறு’ ‘வருத்தந் தணிப்பது நீறு’ ‘ஏல வுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவது நீறு’ எனத் திருஞானசம்பந்தர் திருநீற்றை யிட்டுத் தென்னவன் சுரத்தைத் தீர்த்திருக்கின்றனர். அதிகாலையில் நெற்றியில் திரு நீறணிவதால் ‘சிவசிவ’ எனச் சிவபெருமானையும் சிந்திக்கச் செய்கிறது. ஆகையால், தினந்தோறும் நித்திரைவிட்டெழுந்ததும் தேகசுத்தி செய்து முகங்கழுவி வாய்கொப்பளித்துத் திருநீறு பூசும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

உ

# தமிழன்பர் மகாநாடு.

(21—12—1933)

[இராமநாதபுரம் ஸேது சமஸ்தானம் கனம் ஸ்ரீமத் ராஜா ஷண்முக ராஜேஸ்வர சேதுபதியவர்கள் நிகழ்த்திய விரிவுரை.]

தலைவரவர்களே, சீமான்களே, சீமாட்டிகளே!

இப்புஸ்தகக் காட்சிச்சாலையைத் திறந்துவைப்பதற்கு மிக்கதகுதியுடையார் இம்மாகாணக் கல்வியிலாகாத் தலைவரான மிஸ்டர் ஏர்லம் ஸ்மித் துரையவர்களே. தேக அசௌக்கியத்தால் துரையவர்கள் இதனை நடத்த இயலாதது வருந்தத் தக்கது. இதனைத் திறந்துவைக்கும்படி தமிழன்பர் மகாநாடு என்னைக் கேட்டுக்கொண்டதைத் தமிழ்த்தாயின் தொண்டென்று கருதி மறுக்கவியலாமல் ஏற்றுக்கொண்டேன். இந்தக்காரியத்தில் என்னை இம் மகாநாட்டார் நியமித்ததைப் பெரிய கௌரவமாகவே கருதி அவர்க்கு யான் நன்றி பாராட்டுகின்றேன்

ஒவ்வொரு நாட்டின் முன்னேற்றமும் அதனதன் அறிவு வளர்ச்சியினாலேதான் உணரப்படும். அவ்வளர்ச்சி அந்நாட்டு நூல்களாலேயே உலகம் அறிவதாகும். அந்நூல்கள், அவற்றை இயற்றிய ஆசிரியர்கள் காலத்தோடு அழிந்துபோகாமல், எக்காலத்தும் அவர்கள் அறிவு உலகிற்குப் பயன்படும்படி செய்யவல்லன.

இந்நூல்கள், முன்னொரு காலத்தில் கர்ணபரம்பரையாகவே வழங்கிவந்தன. பின்னர், சித்திர எழுத்துக்களில் செதுக்கப்பட்டும், சுட்ட களிமண்களிற் பதிக்கப்பட்டும் வழங்கலாயின. இப்படிப்பட்ட பாதுகாப்புக்குரிய அடையாளங்கள் பலபல தேசங்களிலும் ஆங்காங்கு அகப்படுகின்றன. இவ்வாறு நூல்களைப் பாதுகாத்த முறையில், பழைய தமிழ்நாடு எவ்விதத்திலும் மற்ற நாடுகளுக்குப் பின்னடைந்ததென்று நான் சொல்லத் துணியேன். சங்கம் வளர்த்த பாண்டியர்கள் இவ்வறிவுநூற் பாதுகாப்பில் ஊக்கத்துடன் முயன்று வந்தனர் என்பது அவர்கள் அளித்துதவிய சங்கநூல் தொகைகளால் நன்கு அறியலாகும். தொகுத்த புலவர் பெயரும் தொகுப்பித்த அரசர்பெயரும் உடையனவாக நம்நாட்டில் பல பெருநூல்கள் விளங்குதல் இதற்குச் சாட்சியாம். நூலேயன்றிப் பெரும்புலவர்கள் அப்போதைக்கப்போது பாடிய விடுகவிகளையும் போற்றித் தொகுத்துப் பயன்படுத்தும் வழக்கம் இந்நாட்டில் நெடுங்காலமாக உண்டென்பதற்கு அநேகம் அருங்கவித்திரட்டு நூல்கள் அறிகுறியாகும்.

இப்போது நவீனநாகரிக முறையில் நமக்குக்கிடைத்துள்ள நன்மைகளிலே அச்சியந்திரசாலை ஒன்றென்பதும், அஃது அறிவைப் பரப்புதற்கு உரியசாதனம் என்பதும் பலரும் நன்கு அறிவர். அதன் துணையால் மேல்நாடுகளும், கீழ்நாட்டில் ஜப்பான் தேசமும் எவ்வளவு அறிவு முன்னேற்றம் அடைந்துள்ளதென்பதை நான் கூறவேண்டியதில்லை.



நூல் நிலயத்தின் முக்கியநோக்கம், நம் முன்னோர் செய்துள்ள நூல்கள் அனைத்தையும் இறவாது பாதுகாத்து வைப்பதோடு, பொதுஜனங்கட்கு இன்றியமையாத சுகாதார அறிவு, பௌதிக உணர்ச்சி, மருத்துவ வன்மை, தொழில் அறிவு முதலியவற்றைப்பற்றிய நல்லநூல்களை இயற்றியும் பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்த்தும்எவருங் கையாளவைப்பதும் ஆகும்.

அம்முறையில், இப்புத்தகாலயம் செய்யவேண்டிய வேலை மிகவுள்ளதென்று கருதுகிறேன். நம் நாட்டில் பரோடா மஹாராஜா அவர்கள் தம் சம்ஸ்தானத்தில் புஸ்தகாலயப் பிரசாரம் அதிகமாகச்செய்து பொது ஜனங்களுக்குப் பயன்படுத்தி வருவதைப் பத்திரிகைவாயிலாக அறிந்து வருகிறோம். அவர்களுடைய நல்வழியை நாமும் பின்பற்றி ஒழுகுவது அவசியமாகும்.

இம்மாநகரில் புத்தகாலயப்பிரசாரசங்கமொன்று அட்வொகேட் மகா-ா-ா-ஸ்ரீ கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் தலைமையில் ஏற்பட்டு இனிது நடைபெற்று வருவது தமிழ்மக்கட்கு இன்பம் பயப்பதாகும். இதன் அபிவிருத்தி நம் தமிழ் மக்களின் அன்பையும் விடாமுயற்சியையும் ஆதரவையும் பொறுத்ததேயாம். இவர்கள் ஒன்றுகூடிச் செய்யும் வேண்டுகோள், அரசாங்கத்தாராலும் மதிக்கப்பெற்றுப் பெரு நன்மைகள் விளைவதற்கு ஏதுவாகும்.

புஸ்தகாலயங்களை அமைப்பதில் மேல்நாட்டுப் பெருஞ்செல்வர்கள் அளித்துள்ள நன்கொடைகள் எண்ணிறந்தன. 100-க்கு 90-க்கு மேலேயே படித்தவர்கள் உள்ள அம் மேல்நாடுகளில் இப்புஸ்தகாலயமுறை அவசியமென்று கருதப்படுமானால், 100-க்கு 90 பேர் எழுதப்படிக்கத் தெரியாத நம் நாட்டிற்கு எவ்வளவாக இதுவேண்டப்படும் என்பது நான் சொல்லி அறிய வேண்டியதன்று.

புஸ்தகாலயம் என்பது, கண்காட்சிக்கு அழகாக நூல்களை அடுக்கி அமைக்கப்படுவது மட்டும் அன்று. பொதுஜனங்கள் அவற்றை எளிதிற் கையாண்டு வாசித்துப் பயன்படும்படி செய்வதுமாகும். இம்முறையைக் கருதியே, நம்முன்னோர் திருவிழாக் காலங்களில் பலநாடும் திரண்டுவருவதற்குரிய கோயில்களில் இப்புஸ்தகாலயங்களை வைத்துப் போற்றிவந்தனர் என்று கேள்விப்படுகிறேன். அம்முறை இன்றைக்கும் நம்நாட்டு ஜைன சமயத்தவர் கோயில்களில் இருப்பது என்று தெரிவது இன்பந்தரத் தக்கது. மேல்நாட்டார் செய்யும் அறிவுப்பிரசாரமுறையே இப்போது நாம் கையாளத் தக்கதாகும். அரிய பெரிய விஷயங்களை எளிய நடையில் யாவரும் உணர அமைத்தும், அறிவும் அநுபவமும் உள்ள பெரியாரைக் கொண்டு புஸ்தகங்களின் நன்மைகளைத் தெரிவித்தும், பொதுசனங்கள் கற்கவேண்டிய சௌகரியங்களை அமைத்தும், உபந்யாசங்களால் அரியவிஷயங்களை விளக்கியும், நேரிடும் சந்தேகங்களைத் தெளிவித்தும், அறிவில் ஆசையைப் பொதுசனங்கட்கு உண்டாக்க வேண்டும். புஸ்தகாலயங்களை விட்டு ஜனங்கள் பிரிவதற்கு மனமில்லாதபடி இருக்கும்படியான வசதிகளை அமைக்கவேண்டும். இப்படிப்பட்ட புஸ்தகாலயங்கள் நம்நாட்டில் மேன்மேலும் தழைத்தோங்க வேண்டும்.

இப்பேர்ப்பட்ட புஸ்தகாலய வளர்ச்சிக்கு அடிப்படையாக வுள்ளது இக் கண்காட்சிச்சாலை. இதைப்புதிதாகக் கூட்டப்போகும் தமிழன்பர்மகாநாட்டுக்கு முன்வைத்துப் புஸ்தகாலய சபையார் நடத்துவதே இதன் முக்கியத் தன்மையை நன்கு காட்டுகின்றது. நம் தேசத்தில் அறிவு பெருக வேண்டும் என்னும் ஆசையை உண்டுபண்ணும் அளவிலாவது இப்புத்தகக் காட்சிச்சாலை பயன்தாராமற் போகாது. இம் முயற்சி, ஆங்கில நூற்பழக்கம் அதிகமாகவுள்ள இத் தலைநகரத்தில்மட்டும் அன்றி நாட்டுப்புறத்து ஊர்களிலும் நிகழுமாயின் இன்னும் அதிகப்பயன் விளைக்கும் என்று நம்புகின்றேன். இவ்வுயர்ந்த முறையால் அறிவைப் பரப்புதற்கு மேல்நாட்டார் கையாண்டுவரும் முயற்சியும் அடையும்பயனும் அளவிறந்தன. கிடைத்த அளவில் பலதுறை நூல்களையும் அந்த அந்தத் துறைக்கு உரியமுறையில் பகுத்து, இந் நூல் நிலயத்தைக் காட்சிக்கினியதாக வைத்திருப்பது, யாவருக்கும் அதிக மகிழ்ச்சியை விளைக்கும். ‘தமிழன்பு’ என்பதற்கு, ‘தமிழறிவுக்குக் கருவியான நூல்களிடத்துள்ள அன்பு’ என்பதே பொருள் என்று இச் சபையார் கருதிய உண்மையை இக் கண்காட்சியே இனிது புலப்படுத்துகின்றது. இந் நூற்காட்சி இறைவனருளால் ஆண்டுதோறும் நிகழ்ந்து, பல துறைகளிலும் புதிய நூற்பெருகுதிகளைப் பெற்று அறிவொளி வீசி ஞான சூரியன் போல அகவிருள் நீக்கி விளங்க வேண்டுமென்று பிரார்த்தித்து இப் புஸ்தகக் காட்சிச் சாலையைத் திறக்கின்றேன்.

*          *          *          *

[ஆனரபிள் டாக்ட்டர் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் நிகழ்த்திய விரிவுரை:]

**தலைவரவர்களே, சீமான்களே, சீமாட்டிகளே!**

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் தமிழன்பர் மகாநாடு இச்சென்னைமாநகரில் இன்று கூடுகின்றது. பிற்காலத்துப் பெருவள்ளல்களில் ஒருவராகிய பச்சையப்ப முதலியார் கல்வி மண்டபத்தில், தமிழ் வளர்ச்சிக்காக இத் தமிழன்பர் மகாநாடு கூடுவது மிகப்பொருத்தமானது. இம்மகாநாட்டைத் திறந்து வைக்கத்தக்க பேராற்றல் மிக்க பெரியோர் எத்தனையோ பேர்கள் நம்நாட்டில் இருக்கின்றார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். என்னிடம் அத்தகைய பேராற்றல்கள் இருப்பதாக நான் எண்ணவில்லை. ஆனால், நான் இம்மகாநாட்டைத் திறந்துவைப்பதற்கு இசைந்தது அதை ஒரு பெரும்பாக்கியமென்று கருதியே யாகும். தாய்மொழித் தொண்டுசெய்ய எனக்குச் சரியான சமயம் கிடைத்தபோது, நான் அதனை எங்ஙனம் மறுக்கமுடியும்?

தமிழன்பர்களே! நம் தாய்மொழியாகிய தமிழ் மிகப் புராதனமானது; எவரும் வியக்கவல்ல ஆற்றல் வாய்ந்தது; நாகரிகம் படைத்தது; பல கலைகள் நிரம்பியது; விரிந்த நோக்கமுடையது. முடியுடை வேந்தர் மூவரும் செய்த மொழித்தொண்டுகள் கணக்கில. சங்கமிருந்து தமிழாராய்ந்தவர்கள் எத்தனையோ பெரும் புலவர்கள். சேதுபதிகள், ஜமீந்தார்கள், பிற வள்ளல்கள், மடாதிபதிகள், சைவசமயாசாரியர்கள், ஆழ்வார்கள், பௌத்த ஜைன சமயத்தவர், மகமதிய அறிஞர், கிறிஸ்தவ அறிஞர் முதலிய எத்தனையோபேர் பல துறைகளிலும் நம் தமிழ்மொழியை ஆதரித்து வந்திருக்கிறார்கள். இவர்கள் எங்கே எப்பொழுது எப்படி ஆதரித்தனர் என்ற விஷயத்தைப்பற்றி நான் எதையும் இப்பொழுது சொல்ல உத்தேசிக்கவில்லை.



ஆங்கிலத் துரைத்தனத்தார் நம் தேசத்தை ஆளுகின்ற இந் நாளிலே நாகரிகம் நாளுக்குநாள் பெருகிவருகின்றது. புதிய புதிய விஷயங்களெல்லாம் பிறபாஷைகளிலே தோன்றிக்கொண்டே யிருக்கின்றன. பிற நாடுகளெல்லாம் கல்வியில் அதிகவிரைவாக முன்னேறி வருகின்றன. நாம் மாத்திரம் ஒன்றும் செய்யாமல் இருக்கிறோம். நமது தமிழ்மொழி புதியபுதிய துறைகளில் வளர்ச்சிபெற வேண்டாமா? பழம்பெருமை பேசியே காலத்தைப் போக்கிவிடுதல் நல்லதா? நமது மக்களுக்கு அறிவுபெருகவேண்டாமா? படிக்காதவர்கள் சங்கியை இன்னும் நமதுநாட்டில் குறைந்தபாடில்லையே! இந்தவிஷயம் எந்த அறிவாளியின் நெஞ்சத்தைத்தான் புண்ணாக்காது? தமிழ், தமிழ் என்று பேசிப்பேசி நாம் காலத்தை வீணாக்கினால், புதியவழிகளில் இறங்கி நாம் எப்பொழுதுதான் உழைப்பது?

நண்பர்களே! இனித் தமிழின் தற்கால நிலைமையைப் பாருங்கள். அது மிகவும் கவலைக்கிடமாக இருக்கின்றது. ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி, உயர்தரக்கல்வி இம்மூன்றுக்கும் எத்தனையோ பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. தமிழுக்கும் தனியான கௌரவம்அளிக்கப்பட்டுவருகின்றது. ஆனால், அதன் அபிவிருத்தி அவ்வளவு சிலாகிக்கக்கூடியதாக இல்லை. இனி ஒருகால் அதற்கு நல்லநிலை ஏற்படலாம். தமிழ் முன்னேற்றம் அடையாததற்கு ஆங்கில பாஷையும் துரைத்தனமுமே முக்கியகாரணமென்று சிலர் கூறலாம். அஃது உண்மையன்று. நாமே அதன் அபிவிருத்திக்குத் தடையாக நின்றோம் என்று சொல்வது பொருந்தும். எதற்கும் துரைத்தனத்தாரையே எதிர்பார்த்துச் சும்மா இருந்தால் ஒன்றும் நிறைவேறாது. நம்முடைய நோக்கம் இப்படியென்று அவர்கள் கண்டால் அல்லவோ, அதற்குத் தக்கபடி உதவிசெய்ய முன்வருவார்கள்.

படித்தவர்கள் மாத்திரம் அறிந்து அனுபவிக்கக்கூடிய செய்யுள் நூல்களும் வசன நூல்களும் தமிழ்மொழியில் நிறைந்து கிடப்பதால், அவை பொதுமக்கட்கு அறிவைக் கொடுக்கக்கூடிய வகையில் அமையவில்லை யென்று சிலர் கூறலாம். ஒருகால் அஃது உண்மையாயிருக்கலாம். ஆங்கிலபாஷையின்கண் அறிவைத் தரக்கூடியனவும் அனைவரும் படிக்கக் கூடியனவுமான செய்யுள் நூல்கள் வசனநூல்கள் இருப்பது போலவே, நமது தமிழ்மொழிக்கும் இருக்கவேண்டியது அத்தியாவசியமல்லவா? அவையில்லாத குறையை நீக்குவது இம்மகாநாட்டின் கொள்கைகளில் ஒன்றென்பதை அறிந்து நான் பெரிதும் மகிழ்கின்றேன்.

சிலர் நம்நாட்டுச் சிறுவர்களுக்கு ஆங்கிலத்தில் ஓர் ஊக்கமும் உற்சாகமும் உண்டாவது போலத் தமிழில் உண்டாவதில்லையே யென்று கூறுகின்றார்கள். தமிழில் வசன நடைக்கு உறுதியான நிலை இன்னும் ஏற்படாதது வருந்தத் தக்கது. எது நல்ல வசனநடை என்ற ஒரு கேள்வி ஏற்படுமானால், எத்தனைபேர் அதற்குப் பதில் சொல்லுவார்களோ அத்தனை விதமாக அதற்குப் பதிலும் இருக்கும். இந்த நிலை மொழிவளர்ச்சிக்குப் பெரியதொரு தடையாக இருக்கின்றது. எளிய நடையில் இனிய சொற்களைக்

கலந்து எவரும் எளிதில் அறியக்கூடிய தன்மையில் எழுதவேண்டுமென்பதை மனத்திற்கொண்டு அவ்வாறு எழுதாமல், மனம்போனவாறெல்லாம் இழுத்துக்கொண்டு போகவிடுவது பாஷையின் உயர்வுக்கு நிச்சயமாய்த் தீமையைத் தரக்கூடியது. செய்யுள் நூல்களில் வழங்கும் சொற்களைத் தேடிப்பிடித்தும் வழக்கத்திலில்லாத சொற்களைப் புதிது புதிதாகக் கண்டுபிடித்தும், பொருட்பொருத்தமில்லாமல் அச் சொற்களை வழங்கி, யாருக்கும் ஒன்றுமே விளங்காமல் தம் ஆற்றலை வெளிப்படுத்துதலையே பிரதானமாகக்கொண்டு, இதனைப் படிப்பவர்கள் எவர் என்பதைக் கனவிலும் கருதாமல், விடாப்பிடியோடும் ஆவேசத்தோடும் எழுதப்படும் சில புத்தகங்கள் பாஷையின் முன்னேற்றத்துக்குக் கேடு விளைப்பனவேயாம்.

நாம் பார்க்கின்ற, உணர்கின்ற, எண்ணுகின்ற அனுபவத்திற் கேற்றவைகளுக்குப் பொருத்தமான சொற்களையே நாம் எழுதும் நடையில் பிரயோகிக்கவேண்டும். நாம் தெளிவுடன் எழுதினல் பிறருக்கும் அது தெளிவாக இருக்கும். கருத்தும் பேச்சும் ஒன்றை யொன்றுவிட்டு என்றும் பிரிவதில்லை. நாம் இனி உண்டாக்க இருக்கும் புத்தகங்கள் உண்மையான வசன லட்சணங்கள் அமைந்து வெளிவருதல் நலம்.

நாட்டுமக்களுக்குக் காலத்திற்கேற்றபடி நல்லறிவு தரக்கூடிய நூல்களை மேல் நாட்டு அறிஞர்கள் தத்தம் மொழிகளில் பல்லாயிரக் கணக்காக எழுதிவைத்துள்ளார்கள். தினந்தோறும் புதிய புதிய நூல்கள் வெளிவந்துகொண்டே யிருக்கின்றன. அந்த நூல்களினின்று இப்பொழுது வேண்டிய நூல்களை நல்ல நடையில் மொழிபெயர்த்தால், மொழிபெயர்க்கும்போது சில சொற்களுக்குச் சரியான பிரதிபதம் நமது மொழியில் காண முடியாது. இஃது இயற்கையே. சரியானசொற்கள் கிடைக்காவிட்டால் அதேசொற்களை உபயோகித்துவிடலாம். அதனல் பாஷைக்குக் குறையென்று எவரும் கூறமுடியாது. உதாரணமாக High Court என்னும் சொல்லைத் தமிழில் ஹைக்கோர்ட்டு என்று எழுதினல் யாருக்குத்தான் பொருள் விளங்காது? அதையே உயர்தர நீதிமன்றம் என்று மொழிபெயர்த்தால் அதில் எத்தனைபேருக்குத் திகைப்பு உண்டாகின்றது?

கல்லூரிகளிற் படிக்கும் மாணவர்க்குப் பொதுவாக நமது தாய்மொழியாகிய தமிழில் நாம் எதிர்பார்க்கின்றபடி அறிவு ஏற்படுகின்றதில்லை. அதற்குக் காரணம் மாணவர்கள் தங்கட்குப் பாடமாக வைத்திருக்கும் புத்தகங்களைத்தவிர வேறு புத்தகங்களைப் படிக்காமையே. அவர்கள் படிப்பதெல்லாம் பரீக்ஷையில் தேறுவதற்காகவே. கூர்ந்து படிக்கவேண்டுமென்ற தீவிர ஆசை தரக்கூடிய புத்தகங்கள் அதிகம் உண்டாக்கவேண்டும். அறிவு வளர்ச்சிக்குத் தகுந்த புத்தகங்களைப் பெருவாரியாக உண்டாக்கிக் கிராமங்கள்தோறும் புத்தகசாலைகள் அமைக்கப்பட்டால், அந்த அந்த இடங்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களைத் தங்களுக்கும் தேசத்திற்கும் நலம் தரும் வழிகளில் உபயோகிக்கலாம். அவர்கட்கு அறிவு பெருகும். கிராமம் நகரம் என்று தனித்து நிற்கும் இந்த இரண்டு பிரிவுகளும் ஒன்றாகும். அந்த ஒன்றாகும் நிலையையே நாம் வேண்டுகிறோம். அதற்குப் புத்தகசாலைகள் பெரிதும் துணைபுரியும். பிற நாடுகளில் உள்ள புத்தகசாலைகளின் தொகையையும் நம்நாட்டிலுள்ள அவற்றின் தொகையையும் ஒப்பிட்டுப்பார்த்தால், நம்நாட்டில் ஒன்றுமே இல்லையென்று சொல்லத்தக்க



அளவில் இருக்கின்றது. இந்தச் சமயத்தில் நம் தாய்மொழிக்குப் பல துறைகளிலும் நம் நண்பர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் செய்துவரும் அரிய பெரிய ஊழியத்துக்காக நம் தமிழ்நாடு அவர்களிடம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறதென்று நான் சொல்வது மிகையாகமாட்டாது. ஆங்கிலபாஷையின் உயர்வையும் அதன்செல்வாக்கையும் அதன்விரிவையும் அதன் அபிவிருத்தியையும் அதனைப் பயில்வதால் வரும் நன்மைகளையும் நான் உங்கட்கு எடுத்துக்கூறுவது மிகையென்று எண்ணுகின்றேன். அத்தகைய உயர்வை நம் தாய்மொழியும் பெறவேண்டுமென்று நான் மனப்பூர்வமாய் எண்ணுவதுபோலவே, யாவரும் எண்ணுவரென்பது என் துணிவு.

தாய்மொழி மூலமாகப் பொதுமக்கள் நல்லறிவுபெற்று உய்யும்படியான ஒருபெரிய இயக்கத்தில் நாம் ஈடுபட்டிருக்கின்றோம். இவ்விஷயத்தில் ஜாதி, மதம் முதலியவற்றின் சார்பான எத்தகைய சச்சரவுகளுக்கும் இடமில்லை. எல்லாமக்களும் நம் தாய்மொழியின் மூலமாய்ப் போதிய அறிவைப்பெற்று விளங்கும் அக் காட்சியைக் கண்ணாரக்கண்டு அளவிலா இன்பம் அடைவோம். தமிழே பேசட்டும், தமிழிலேயே எழுதட்டும், எங்கும் தமிழ் முழக்கமே முழங்கட்டும்.

ஒரு பாஷை இயங்கிக்கொண்டிருக்கும் நாட்டில், பிறபாஷை பேசுவோர் வந்து சேர்வதும், அந்தப் பிறபாஷையின் சொற்களும் கருத்துக்களும் அதிற் கலப்பதும் இயற்கை. அக்கலப்பினைத் தவிர்த்துவிட்டுத் தனியாகவே நிற்பேன் என்ற பாஷை எங்கேனும் தன்னலம்பேணுமா? அப்படி ஒதுங்கி நிற்கலாமா நம் தமிழ்மொழி? ஆங்கில பாஷை இங்ஙனம் ஒதுங்கி நின்று உலகெலாம் மதிக்கத்தக்க உன்னதநிலையை அடைந்தது? ஆனாலும், பாஷையின் சிறப்பியல்புகளைக் குறைக்கக்கூடிய எந்தக்கலப்பும் விரும்பத்தக்கதன்று. நாம் பேசுகின்ற பேச்சில் எத்தனை ஆங்கிலச் சொற்களைக் கலந்துபேசுகிறோம். வேண்டாம் வேண்டாம் என்று தள்ளிப் பார்த்தாலும் முடிகின்றதா?

தமிழன்பர்களே! அறிவு அனைவருக்கும் பொது. அஃது ஒருவருக்கே உரியதன்று. அதனை ஆடவரும் பெறவேண்டும்; மகளிரும் பெறவேண்டும்; ஏழையும் பெறவேண்டும்; தனிகனும் பெறவேண்டும். அதனைப் பெறுதற்கு மொழியன்றோ கருவி? அதனையல்லவா நாம் போற்றல் வேண்டும்? இத்தகையபெருமுயற்சியில் வீணான மனத்தாங்கல்களுக்கு இடமேது? ஜாதி, மதம் முதலியவற்றால் இவ் வியக்கம் விலக்கப்பட மாட்டாது. பேசிப் பேசிக் கழிந்த நாட்கள் எண்ணத் தொலையா. கழிந்தன கழிந்தனவே; அவற்றிற்காக வருந்தவும் வேண்டாம். எதிர்காலத்தில் நம்முடைய தாய்ப்பாஷை உன்னத ஸ்திதியை அடையுமென்பது நிச்சயம். இதற்கு ஒவ்வொருவரும் தம்மாலான உதவிபுரிதல் அவசியமென்பதை நான் வற்புறுத்தவேண்டியதில்லை. ஊக்கமும் உற்சாகமும் உண்டாகி விட்டால், அந்நற்காலம் அதிசமீபத்திலேயே வந்துவிடும். தமிழ் முன்னேற்றம் தமிழர் முன்னேற்றத்தையே பொறுத்ததாகும்.

இம் மகாநாட்டின் சார்பாக நாம் எண்ணிய எண்ணம் நிறைவேற இறைவன் திருவருளைவேண்டி இதனை நான் திறந்துவைக்கின்றேன்.

# சிவபெருமான் குணாதீதர்.

(யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களவர்கள்.)

மகாஞானிகளாலும் அறிதற்கரிய சிவபெருமான் பரைக்குப் பரமாயுள்ளவர். சாத்துவிகம், இராசதம், தாமதம் ஆகிய முக்குணங்களையுங் கடந்த நிர்க்குணர். அவர் அருண்ஞான குணமுடையவர். மலரகிதராகிய அக்கடவுள் ஆன்மாக்களுடைய பாசத்தை நீக்கவேண்டும் என்னும் திருவருளினாலே பிரம விட்டுணுக்களுக்கு முறையே படைத்தல் காத்தல்களையும் சாத்துவிக இராசத குணங்களையும் உள்ளனவாக்கி, அழித்தற்றொழில் கோபத்தால் முடித்தல் வேண்டுதலால் அத்தொழிலின்கண்ணே தாமத குணத்தை வைத்தார். சங்காரத் தொழில் ஒன்றைக்குறித்து நிருமலராகிய பரமசிவனுக்குத் தாமதகுணத்தைக் கூறினார் பெரியோர். சிவபெருமானுக்குத் தாமதகுணம் இயற்கைக் குணமன்று. அக்குணம் அவர்க்குச் செயற்கையாம். ஆன்மாக்கள் ஓயாமற் பிறந்திறந் துழலாவண்ணஞ் சங்கரித்து அவர்களுடைய வருத்தத்தைச் சிறிதுகாலம் மாற்றுதலால் சங்காரமுந் தீயதன்று; அருட்செயலேயாம்.

பிரமவிட்டுணுக்களுக்குரிய சாத்துவிக இராசதகுணங்கள் அவர்களுடைய அவ்வச் செயல்களுக்காக மாத்திரம் செயற்கையாய் அமைந்தன வன்றி, ஆராயின் இயற்கையாய்ச் சொல்லுதல் ஆகாது; அந்தப் பிரம விட்டுணுக்களிடத்தில் மற்றை இரண்டு குணங்களுஞ் சேரும். விட்டுணுவுக்கு வடிவம் முழுவதும் நீலமாயதும், சமுத்திரத்தி லுறங்குவதும், பிறவும் உளவாயிருத்தலின், தாமத ராசத குணங்களும் அவரிடத்துள்ளனவாம். அந்த விட்டுணு நல்லறிவுண்டாயகாலத்துச் சிவனை அருச்சித்து அவருடைய திருவருணெறியினிற்றலையும் ஞானத்தையும் பெறுதலினால் சாத்துவிக குணமும் பெற்றுள்ளார். வடிவம் பொன்மயமா யிருத்தலினாலும், தவத்தினாலும், பூசையினாலும் பிரமாவினிடத்தும் எல்லாக்குணமும் உளவாயின. ஆதலினால், விருப்பு வெறுப்புடையோர் யாவரும் முக்குணவயத்தராவர். சிவபெருமானுக்கு அந்த விருப்பு வெறுப்புக்களில்லாமையினாலே, அவருக்கு ஒருகுணத்தைச் சொல்லுதல் அறியாமையாகும். 'மும்மாயாதத்துவப் பொருளனைத்தையும் முன்னாளிலே தந்தவர் சிவபெருமானே.' என்று நான்கு வேதங்களுஞ் செப்பும். விட்டுணு முதலிய தேவரிடத்தும், மற்றை உயிர்ப்பொருள் உயிரல்பொருள்களிடத்தும் எங்குமாய் வியாபித்து, எல்லாவற்றையும் இயற்றுகின்ற சிவபெருமான் ஒரு குணச்சார்பிற் பொருந்துவரோ? வேதாகமங்களை அருளிச்செய்து, சனகாதி முனிவர்களுக்கு ஞானோபதேசம் செய்தலினாலும், வெண்மையும் நின்மலமுமாகிய வடிவைப் பொருந்துதலினாலும், 'வேதங்கள் வித்தையின்மூலம்' என்று அவரையே துதித்தலினாலும் சிவபெருமானே குணாதீதர் என்னுமுண்மை நன்கு தெளியப்படும். சிவபெருமான் குணாதீதர் ஆதலினன்றே அவர்க்கு 'நிர்க்குணன்—குணாதீதன்' என்னும் பெயர்கள் எய்தின.



"நிர்க்கு ணத்தனே நிமல னன்னவன்
சிற்கு ணத்தனாய்த் திகழு வானொரு
சொற்கு ணத்தனோ தொலைக்கு நாளடு
முற்கு ணத்தினை முன்னு மாறலால். (கந்தபு: உமைவரு-சஎ)

இதனைக் கந்தபுராணம் அநந்தன் சாபநீங்குபடலம் கஎ-ம் செய்யுள் முதல் பதினைந்து செய்யுட்களாலும், உமைவருபடலம் சஎ-ம் செய்யுள் முதல் ஆறு செய்யுட்களாலும், சங்கரசங்கிதை—தக்ஷகாண்டம் உகூ, ௩0-ம் அத்தியாயங்களாலும் உணர்க. இவ் வுண்மை,

"ஏகராகிய தேவர் (சிவபெருமான்) சமஸ்தபொருள்களுள்ளே மறைந்துள்ளாரும், சர்வ வியாபகரும், சர்வ பொருள்களுக்கு அந்தரியாமியும், கர்மாத்தியக்ஷரும், சர்வபொருள்களில் வசிப்பவரும், சாக்ஷியும், அறிஞரும், தனிப்பொருளும், சாத்துவிக இராஜத தாமத குணமில்லாத நிர்க்குணருமாயுள்ளார்." என சுவேதாசுவதர உபநிடதமும் (சு—கக),

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரனாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானா வறிவா யளவிறந்து தோன்றானே
வானே முதல்களையின் வந்து.

என சிவஞான போத வெண்பாவும்,

"எண்டுக் குணம் என்றது முக் குணங்களை. அவ்வாறின்றி, நிர்க்குணன் என்பது ஒரு குணமுமில்லான் என்றுரைப்பின் அது தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்களை இயல்பாகவுடைய முதல்வனுக்கு ஏலாமையின் மாயாவாதி முதலியோர் கூற்றாய் முடியுமென்றொழிக." எனச் சிவஞானபோத மாபாடியமும்,

"கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி யிறந்ததோர் குணமே!"

எனத் திருவிசைப்பாவும் கூறுமாற்றால் நன்கு தெளியப்படும்.

## வினா.

சிவபெருமான் கண்ணாடியிற் றன்னுருவைக் கண்டு சுந்தரம் வருக வென்றழைக்க வந்தவர் சுந்தரமெனவும், பின்பு ஆலால சுந்தரமெனவும் பெயர் பெற்று, சடையநாயனாருக்குப் பிள்ளையாகவும் தோன்றினா ரெனச் சரித்திரத்தாலறியப்படுகிறது. சிவபெருமான் கண்ணாடியைப் பார்க்கும்போது எவ்விதமாக விருந்தார்? கண்ணாடியிற் றோற்றிய பிரதிபிம்பம் அதைப்போ லல்லவோ யிருக்க

வேண்டும்? சுந்தரத்திற்கு முக்கண் சடைமுடி கங்கை சந்திரன் மான்மழு முதலியவை காணப்படாமல் மாநுடரைப் போன்ற உருவம் தோன்றிய தெங்ஙனம்? இவ் வரலாற்றை ஆராய்ச்சி யுடையார் சிவநேசன் வாயிலாய் வெளியிடுவார்களெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விடைவிரும்பி.

---

## சீதையின் வரலாறு.

சீதை ராமருடைய தர்மபத்தினி; ஜனகமகாராஜ குமாரி; முற்பிறப்பில் குசத்துவசர் என்னு முனிவர்க்கு மானச புத்திரியாய்ப் பிறந்து வேதவதி என்னும் கன்னியாயிருந்தனள். இவளை விஷ்ணுவுக்குத் திருமணஞ் செய்து கொடுக்க முனிவர் தீர்மானித்திருந்தனர். தம்பன் என்னும் அசுரன் தனக்குக் கொடுக்க வேண்டுமென்றுகேட்க, முனிவர் சம்மதிக்கவில்லை. ஓரிரவு துயிலுற்றிருந்த சமயத்தில் தம்பன் அம்முனிவரைக் கொன்று அந்தப்பிரமஹத்தி தோஷத்தால் தானு மாண்டொழிந்தான்.

இக்கன்னிகை விஷ்ணுவையே திருமணம் புணரத் தவம் புரிந்துகொண்டிருக்க, அப்போது திக்குவிஜயஞ்செய்ய அவ்வழிச்சென்ற இராவணன் இக் கன்னிகையைக் கண்டு மோகித்து இவளுடைய தவத்துக் கிடையூறு செய்தான். அவனை நோக்கி 'துஷ்ட! நீயென் தவத்துக்கிடையூறு செய்தமையின், நான் இப்பூமியிலேயே பிறந்துஉன்னையும் உன்னினத்தவரையும் அழிக்கக் காரணமாகின்றேன்,' என்றுசொல்லித் தீ வளர்த்து அதிலிறங்கி உருமறைந்தனள். பின், இலங்கையில் ஓர் தாமரைத்தடாகத்தில் ஜனித்துச் சிவபூசைக்குத் தாமரைமலர் பறிக்கவந்த இராவணனுக்கு ஓர் கமலமலரிற் காணப்பட்டாள்.

அக்குழந்தையை இராவணன் ஆவலோடெடுத்துப்போய், ஜோசியநிபுணர்கள் இச்சிசுவால் இலங்கை அழியுமென்று சொன்னவுடனே அக்குழவியை யோர் பெட்டியிலிட்டுக் கடலில் விடுவித்தனன். அஃது அலைகளால் மிதுலா நகரத்துக்கருகில் வந்து மண்ணில் மறைந்துகிடந்தது. அந்நகர்க் கரசனாகிய ஜனகமகாராஜன் புத்திரகாமேஷ்டியாகமியற்றுவான் கருதி யாகசாலை நிருமாணஞ்செய்ய நிலந்திருத்தற்கு ஏர்கட்டி உழுகையில் படைச்சாலில் பெட்டி அகப்பட்டது. அப்போது அவர் அப்பெட்டியைத் திறந்துபார்த்துப் பெருநிதிகண்டவற்போல் பேரானந்தமடைந்து அக் குழந்தையையெடுத்து வளர்த்துச் சீதையெனப் பெயரிட்டு இராமருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். பின்னரிவள் இராவணனா லபகரிக்கப்பட்டு அவன் தன்னினத்தோடு மாண்டுபோவதற்கும் இலங்கை அழிவதற்கும் காரணமானாள். தேவர்களும் மக்களும் இதம்பெறலாயினர். கற்பின்றிறத்தை நிலைநிறுத்தினள்.

நல். கண்ணப்ப முதலியார்.

---



தோன்றிட— (எனக்கு) விளங்கும்படி
சொல்—சொல்லியருளுக.

ஏழு தாதுக்கள்:—நரம்பு, எலும்பு, மூளை, தசை, தோல், இரத்தம், சுக்கிலம்.

ஆறத்துவாக்கள்:—மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை.

ஆன்மாக்கள் தமக்கெவ்வகையிலும் அகப்படாத சிவத்திற் கலந்து நிற்பதெப்படி?

பொருள் வேறுபட்டா லன்றிப் பொருளியல்பு வேறுபடுவதில்லை. சிவத்தோடு கலந்துநிற்றல் ஆன்மாக்களுக் கியல்பாயின், சிவபிரான் சரீர பந்தத்தைக் கொடுத்து அவைகளை விலகி நிற்கச் செய்வதெப்படி?

சரீரங் கொடுக்கப்பட்டது ஆன்மாக்கள் அதனைப் பெற்றுத் தமது கன்மத்தைப் புசித்தொழித்தற் பொருட்டாயின், கன்மத்தை நீக்குதற்குச் சரீரம் இன்றியமையாது வேண்டப்படுமென்பது சித்திக்கும். ஆனால், இருவினையொப்பு வந்த ஆன்மாக்களுக்குமட்டும் சஞ்சிதம் தீக்ஷையாலும், பிராரத்தம் எடுத்தவுடல் நுகர்ச்சியாலும், ஆகாமியம் இறைவன் ஏன்று கொள்ளுதலாலும் நசிக்கின்றன. இவ் வான்மாக்களுக்கு உடம்பிருந்துங் கன்ம நீங்குதற்கண் சிறிதும் உபகரித்தலில்லை. ஆகவே, சில வான்மாக்களுக்குக் கன்ம நசித்தற்கெனச் சரீரபந்தத்தைக் கொடுத்து அவைகளை யிடைவிடாத துன்பத்திலாழ்த்தியும், சிலவான்மாக்களுக்கு அப் பந்தத்தின் துணை வேண்டாமலே கன்மநசிப்பை யுண்டாக்கி அவைகளை யிடைவிடாத இன்பத்தி லாழ்த்தியும் வருதல் சிவபிரானது நீதிக்கடுக்குமா?

அன்றேல், அவன் ஆன்மாக்களுக்குச் சரீர பந்தத்தையுங் கொடுத்துக் கன்மத்தைத் துடைப்பானாயின் அஃதெம்மட்டி லமையும்?

---

17\. சொற்றெழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவு நின்செயற்கண்
மற்றவர்க ளின்னோக்கின் மாய்ந்தவுயிர்க்—குற்றங்
கொளுத்தியாங் கைய வுயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றையெங் கோ.

ஐய—ஆசாரிய மூர்த்தியே!
உயர்—(எல்லா வளங்களாலும்) சிறந்த
வெண்ணெய் நல்லூர்—திருவெண்ணெய் நல்லூரில் (வாழ்கின்ற
மதுக் குளித்த—தேனால் நனைந்த [வரும்)
கொன்றை—கொன்றை மாலையை (அணிந்தவருமாகிய)
எம் கோ—பசுபதியே!
சொல்—(உம்மால்) ஏவப்படுவதாகிய

தொழும்பு—பணியை
கொள்ள—(எல்லா வான்மாக்களுமே) செய்யத்தான்
நீ—நீர்
சூழ்ந்ததுவும்—விரும்புவதும்.

(ஆனால், நீர்)

நின் நோக்கின்—உமது திருவருளில்
மாய்ந்த—வசமழிந்த
உயிர்க்கு—ஆன்மாக்களுக்கு (மட்டும்)
அங்கு—அவைகளினுள்ளத்தில்
உற்று—தங்கிப் (பிரகாசித்து)
மற்றவர்கள்—மற்ற வான்மாக்களும்
நின் செயற்கண்—உமது வலியிலேயே (இருக்க)
ஆங்கு—அவைகளுக்கு
ஒளித்தி—மறைந்துகொள்ளுகின்றீர்.

(அஃதேன்? சொல்லியருளுக).

பெத்த முத்தி யென்னுமிரண்டிலு மிருக்கின்ற எல்லா வான்மாக்களும் அடிமையே. சிவபிரானொருவனே யாண்டவன். ஆனால், அவன் பெத்தான்மாக்களுக்கு மறைந்தும், முத்தான்மாக்களுக்கு வெளிப்பட்டும் நிற்கின்றான். அஃதேன்?

---

18. கோலங் கொண்ட வாறுண ராதே
ஞாலங் காவல னியானெனக் கொளீஇ
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நாடி நாடா
வென்னுட் கரந்தென் பின்வந் தருளி
யென்னையுந் தன்னையு மறிவின் றியற்று
மென்னதி யானெனு மகந்தை யுங்கண்
டியாவரி யாவையு மியாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்த்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்
டெற்பணி யாளா வெனைப்பிரி யாதே
யோடி மீள்கென வாடல் பார்த்திட்
டென்வழி நின்றன னெந்தை யன்னோ
வருண்மிக் வுடைமையி னருட்டுறை வந்து



பொருண்மிக வருடலும் பொய்ப்பகை யாதலுங்
கைகண்டு கொள்ளெனக் கட்டுல கறிய
மெய்கண்ட தேவ னெனப்பெயர் விரீஇத்
தன்னுட் கரந்து தான்முன் னாகித்
தன்னதுந் தானுமா யென்னையின் றாக்கித்
தன்னையு மென்னையுந் தந்து தனது
செய்யா மையுமெ னதுசெய லின்மையு
மெம்மான் காட்டி யெய்த
லம்மா வெனக்கே யதிசயந் தருமே.

கோலம் கொண்ட ஆறு—சரீரமெடுத்த காரணத்தை
உணராது—அறியாமல்
ஞாலம் காவலன்—பூமிக்கரசன்
யான் என—நானே யென்று
கொளீஇ—தருக்கி,
பொய்யை—அநித்தியத்தை
மெய் என—நித்தியமென்று
புகன்று—நம்பி,
வையத்து—இவ்வுலகத்தின்பால்
ஓடாப் பூட்கை—கெடாத ஆசைப் பெருக்கை
நாடி—நினைந்து,
நாடா—(உண்மையைத்) தெளிய மாட்டாத
என்னுள்—எனக்குள்ளே
எந்தை—எனது சிவபிரான்
கரந்து—ஒளித்திருந்து,
என்பின் வந்தருளி—(அவன் நானே யென்னுமாறு) எனக்குப்பின் [னின்று,
என்னையும்—எனது பரிதாபத்தையும்,
தன்னையும்—தனது காருணியத்தையும்,
அறிவு இன்று—என்னறிவை யில்லையாக
இயற்றும்—செய்கின்ற
யான் எனது எனும்—அகங்கார மமகாரங்களாகிய
அகந்தையும்—ஆணவத்தின் கொடுமையையும்
கண்டு—கவனித்து,
யாவர்—உயர்திணை
யாவையும்—அஃறிணைப் பிறப்புக்களிலும்,
யாங்கணும்—சுவர்க்க முதலிய வுலகங்களிலும்

சென்று—(நான்) போய்
புக்குழி—பிறக்கும்போது
புக்கு—(கூடவே) வந்து
பெயர்த்துழி—இறக்கும்போது
பெயர்த்து—(கூடவே)நீங்கி
மிக்க போகம்—பலவகைப் போகங்களையும்
விதியால்—கருமத்திற்கேற்ப
விளைத்திட்டு—புசிப்பித்து
என் பணியாள் ஆய்—எனது ஏவலாளனாய்
எனைப் பிரியாதே—என்னைவிட்டு நீங்காமல்
ஓடி மீள்கென—'நீ யிவ்வாறு பிறப்பிறப்பிற் சுழல்வாயாக' வெனச்
[செலுத்தி,
ஆடல் பார்த்திட்டு—அச் சுழற்சியைப் பார்த்துக்கொண்டு
என்வழி நின்றனன்— எனது வசத்தில் நின்றான்.
எம்மான்—(அத்தகைய) எனது சிவபிரான்
அன்றோ—(கண்டார்) வியக்கத்தக்க
அருள் மிக உடைமையின்—காருணிய மிகுதியுடைமையாகலின்
கடல் உலகு அறிய—கடல் சூழ்ந்த வுலகமெல்லாம் அறியுமாறு
மெய்கண்ட தேவன் என—மெய்கண்ட தேவ ரென்னும்
பெயர் விரீஇ—திருப்பெயர் தாங்கி
அருட்டுறை—திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருவருட்டுறை
வந்து—(ஆசாரிய மூர்த்தியாக) வெளிப்பட்டு [யிலே
பொருள் மிக அருள்தலும்—(எனக்கு) ஞானத்தைக் கனிவோடு
[தருதலும்
(அஃது என்பால் அவனைத் தோற்றுவிப்பதோடு)
பொய்ப் பகை ஆதலும்—பிரபஞ்சத்தை மறைக்கும் பகைப்பொரு
[ளாவதையும்
கை கண்டுகொள் என—'நீ நன்கு கண்டுகொள்வாயாக' வென்று
என்னை—என்னை [(தரிசிப்பித்தும்)
தன்னுள் கரந்து—தனக்கு ளடக்கி
இன்றாக்கி—தன்வசமாக்கி
தன்னதும் தானும் ஆய்—(என்மாட்டுத்) தன் ஞானமுந் தானுமே
[விளங்கித் தோன்ற
தான் முன் ஆகி—(நான் அவனே யென்னுமாறு) எனக்கு முன்னி
தன்னையும்—தன்னுண்மையும் [ன்று
என்னையும்—என்னுண்மையும் (கெடாதிருப்பதை)



தந்து—தரிசிப்பித்தும்,
தனது செய்யாமையும்—தனது சுதந்திரமும்
எனது செயல் இன்மையும்—எனது பாரதந்திரமும் (கெடாதிருப்
காட்டி—தரிசிப்பித்தும் [பதை)
எய்தல்—(என்னிற்) பிரகாசித்தல்
எனக்கு—எனக்கு
அம்மா! அதிசயம்—அளவு கடந்த வியப்பை
தரும்—தருவதாகும்.

சிவபிரான் ஆன்மாக்களின் வேறாகக் காணப்படாமல் அவைகளே யென்னுமா றொற்றுமைப்பட்டு, அவைகள் பிரபஞ்ச விடயங்களிற் செல்லுமா றெல்லாஞ் செலுத்தி அவைகளின் வசமாய் நின்றுகொண்டிருப்பான். இது பெத்தான்மாக்களுக்கு அவன் உபகரிக்கு முறை.

ஆசாரியமூர்த்தியாக வந்த சிவபிரான் பக்குவான்மாக்களுக்குத் தனது திருவடி ஞானத்தைக் கொடுத்து அதன் வாயிலாகப் பிரபஞ்சத்தை முழுப் பொய்யாக்கி அவைகளின்மாட்டு விளங்கித் தோன்றுவான். தோன்றவே, ஆன்மபோதம் சிவபோதத்தி லிறக்கும். ஆனால், ஆன்மா வென்னும் பொருள்மட்டும் அழியாது. தவிர, அந்நிலையிலும் சிவபிரானே சுதந்திரன்; ஆன்மாக்கள் பாரதந்திரமே யுடையன. அப்போது அவ் வான்மாக்கள் தம்மை வேறு காணாமல் அவனே யென்னுமா றொற்றுமைப்பட்டு அவன் செலுத்துமா றெல்லாஞ் சென்று அவன் வசமாய் நின்றுகொண்டிருக்கும். இது முத்தான்மாக்களுக்கு அவன் உபகரிக்கு முறை.

---

19. தருமா தருமத் தலைநின் றாழ் வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப்—பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தா
னுருவென்ன வந்தெடுத்தா னுற்று.

தரும அதருமத் தலை நின்று—நல்வினை தீவினைகளைச் செய்து
ஆழ்வேனை—(பிறப்பிறப்பில்) அழுந்துகின்ற என்னை
கரு மா கடல் விடம்—கரிய பெரிய கடலினின்றெழுந்த(ஆலகால)
[விஷத்தை
உண் கண்டப் பெருமான்—உண்டடக்கிய கண்டத்தை யுடைய
[சிவபிரான்
திருவெண்ணெய் நல்லூர்—திருவெண்ணெய் நல்லூரில்
சுவேத வனத்தான் என்ன—மெய்கண்ட தேவராக
உரு உற்று—(ஆசாரிய) மூர்த்தங் கொண்டு
வந்து— (என்பால்) வந்து

எடுத்தான்-(அப்பிறவிக்கடலினின்றுந் திருவடிக்கரை) ஏற்றினான்.

சுவேதவனப் பெருமாளென்பது மெய்கண்ட தேவரது பிள்ளைத் திருநாமம்.

சிவபிரானே ஆசாரியனாக வந்து ஆன்மாக்களுக்கு மலநீக்கத்தையும் வீடுபேற்றையும் அருளுகின்றான்.

---

20. உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்று
மற்றவர்க் கற்றவ னல்லவர்க் கல்லவ
னந்த மாதி யில்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்
டிருள்வெளி யாகு மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு
மின்றி யொன்றாய் நின்றவந் நிலையி
லொன்றா காம லிரண்டா காம
லொன்று மிரண்டு மின்றா காமற்
றன்னது பெருமை தாக்கா னாயினு
மென்னது பெருமை யெல்லா மெய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியு
மென்னையு மெனக்கே தந்து தன்னது
பேரா னந்தப் பெருங்கட லதனு
ளாரா வின்ப மளித்துத் தீரா
வுள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்ன னெங்கோன் வார்புனற் பெண்ணை
வெண்ணை காவலன் மெய்கண்ட தேவ
னண்ண லருளா லயத்த னண்ணிய
மலமுத லாயின மாய்க்கு
முலக வுயிர்க்கெல் லாமொரு கண்ணே.

உற்றவர்—உறவினர்,
பெற்றவர்—பெற்றோர்,
அற்றவர்—ஏனைய மனைவி மக்கள்
(முதலிய)



முற்றும்—எல்லாப் பந்தங்களும்
அற்றவர்க்கு—நீங்கியவர்களுக்கு
அற்றவன்—வசமாகின்றவனும்,
அல்லவர்க்கு—மற்றவர்களுக்கு
அல்லவன்—வசமாகாதவனும்
அந்தம் ஆதி இல்லவன்—முடிவு முதலு மில்லாதவனும் (ஆகிய)
(சிவபிரானே)
வந்து—(ஆசாரிய மூர்த்தியாக) எழுந்தருளி
குரக்கு மனத்து—குரங்குபோலு மனத்தை யுடைய
கொடியேன்—பாவியாகிய எனது
பரக்கும் பரப்பை—விரிந்த(பிரபஞ்ச) வியாபாரத்தை
குவித்து—ஒடுக்கி,
நிறுத்தி—(என்னைத் தனது நிறைவில்) அழுத்தி,
பிடித்திட்டு—(பயிற்சி வயத்தால் மீண்டும் பிரபஞ்சத்திற் போகா
இருள் வெளி ஆகும்—கேவல சகலங்க ளாகிய [மல்) தடுத்து,
மருளினை அறுத்து—மயக்க நிலையினை நீக்கி,
வந்து—(என்னறிவில் அவன்) வந்து
புகுதலும்—கலந்து(அதனை) விளக்குதலும்,
சென்று—(நான்போய் அவனறிவிற்) கலந்து
நீங்கலும்—(மலங்களை விட்டு) விலகுதலும்
இன்றி—இல்லாமல்
ஒன்று ஆய் நின்ற—(இருவரும் அநாதியே) கலந்துநின்ற
அந் நிலையில்—அவ் வத்துவித நிலையில் (நான் அவனோடு)
ஒன்று ஆகாமல்—அபேதமு மாகாமல்
இரண்டு ஆகாமல்—பேதமு மாகாமல்
ஒன்றும் இரண்டும்—அபேதமும் பேதமும்
இன்று ஆகாமல்—இல்லை யென்பது மாகாமல் (நிற்க),
தன்னது பெருமை—(பஞ்ச கிருத்திய மாகிய) தனது உரிமையில்
தாக்கான் ஆயினும்—(சிறிதும்) கெடாதவனாயினும்
என்னது பெருமை எல்லாம்—எனது இயல்பெல்லாவற்றையும்
எய்தி—தன்வண்ண மாக்கி,
தன்னை—தனது எண்குணங்களையும்
எனக்கு—என்மாட்டு
தருவதை அன்றியும்—பதிய வைப்ப தல்லாமலும்
என்னையும்—எனது அனுபவ வுரிமையையும்
எனக்கே—எனக்கே

தந்து—கொடுத்து,
தன்னது—தனது
பேர் ஆநந்தப் பெருங் கடலதனுள்—பேரின்பப் பெருங்கடலினின்றும்
ஆரா இன்பம்—தெவிட்டாத வின்பத்தை
அளித்து—நுகர்வித்து,
தீரா—இடையீடில்லாமல்
உள்ளும் புறம்பும்—(எனது)அகத்திலும் புறத்திலும்
ஒழிவு இன்றி—வியாபித்து
நின்ற—நிற்கின்ற
வள்ளன்மை—(தனது) காருணியத்தை
காட்டி—(எனக்குத்) தரிசிப்பித்து,
மலர் அடி—முத்தியை
அருளிய—கொடுத்தருளிய
மன்னன்—சர்வலோக நாயகன்,
எம் கோன்—சர்வான்ம நாயகன்,
வார் புனல்—இடைவிடா தோடுகின்ற வெள்ளத்தையுடைய
பெண்ணை—பெண்ணையாறு (சூழ்ந்த)
வெண்ணை—திருவெண்ணெய் நல்லூரில். (வந்த)
காவலன்—சர்வஞான நாயகன்,
மெய்கண்ட தேவன்—மெய்கண்ட நாதன்,
அண்ணல்—பெருமான்,
அருள் ஆலயத்தன்—அருளுக்கு இருப்பிடமாக விருப்பவன்,
உலக உயிர்க்கு எல்லாம்—சர்வான்மாக்களுக்கும்
நண்ணிய—(பந்தமாய்) வந்த
மலம் முதலாயின—ஆணவ முதலியவற்றை
மாய்க்கும்—நீக்கி (ச்சுகத்தை) யருளுகின்ற
ஒரு கண்—ஒப்பற்ற ஞானனந்த சொரூபன்.

சிவத்துக்கும் ஆன்மாவுக்கு முள்ள கலப்பு இடையில் நிகழ்வதன்று. அஃதென்றுமே யுள்ளது.

அக் கலப்பு பேதமுமன்று; அபேதமுமன்று; பேதாபேதமு மன்று. இம் மூன்றுந் தன் கட்டோன்ற இவற்றிற்கு வேறாயிருப்பதே அது. அதுவே சைவ சித்தாந்தத்திற் கூறப்படும் அத்துவிதம் ஆகும்.

பேதமாவது விரலும் விரலுஞ் சேர்ந்தாற் போன்ற சையோகம்.

அபேதமாவது குடாகாயமும் மகாகாயமுஞ் சேர்ந்தாற் போன்ற ஐக்கியம்.



பாங்கி இறைவனை நகுதல்.

79. சிலையுங் கணையுங் கரத்திற் பிடிக்கிலர் சேணயன்மால்
தலையு மெலும்பு மணிமுது குன்றர் தடஞ்சிலம்பிற்
கலையு மிவர்மனக் கள்ளத்தைப் பெற்றது கட்டுரைக்கிற்
கொலையும் வடியு முறுவேல் விழியுடைக் கொம்பனையே. (கஎ)

பாங்கி மதியின் அவரவர் மனக்கருத்துணர்தல்.

80. விண்ணம் விரும்பு மெழின்முது குன்றர் வியன்வரைப்பொன்
வண்ணம் விரும்பு மியலெழி லாள்புனம் வைகியதும்
தண்ணம் புயமுகத் தான்கலை தேடுறச் சார்ந்ததுவும்
எண்ணம் பிறிதா மெனவிவர் கண்க ளியம்பியவே. (கஅ)

---

## க௦. பாங்கியிற் கூட்டம்.

தலைவன் உட்கோள் சாற்றல்.

81. பாளைக் கமுகு செறிமுது குன்றர் பனிவரைமேல்
வாளுக் கிகலும் விழியீர் தொடலை மருவுதற்கு
நாளைக் கழங்கு மதியைப்பந் தாக்கவு நான்வலியேன்
வேளுக் குருகுறு மென்மேற் சிறிதருண் மேவிடினே. (க)

பாங்கி குலமுறை கிளத்தல்.

82. முன்மே லெழுந்த முதுகிரி வாணர் மொழிவரையாய்
கன்மே லெழுந்த குறமாதை வேறு கழறுவதென்
தன்மே லெழுந்த வறுமையி னேருந் தயங்குறுசெம்
பொன்மே லழுத்திப் புனைகுவ ரோவக்கின் புன்மணியே. (உ)

தலைவன் தலைவியை உயர்த்திக் கூறல்.

83. அறவர் வழுத்துந் திருமுது குன்றி னமரிறைவர்
குறவர் குடித்த புனலமு தாகக் குளிர்சடைமேற்

---

79. கலை - கலைமான். வடி - கூர்மை.

81. தொடலை- மகளிர் விளையாட்டு. நாள் - நட்சத்திரம்; நாளைக் கழங்காக்கவு மென ஆக்கவு மென்பதனை முன்னும் கூட்டுக.

82. அக்கின் புன் மணி - சங்குமணி.

றுறவர் வழுத்த வடைத்தன ரேற்சிற் சொலுமுமதே
மறவர் பிடித்த வடிவே லனையகண் மங்கையரே. (௩)

பாங்கி அறியாள் போன்று வினுதல்.

84. வனைவார் குழலி யிடமுது குன்றர் மணிவரைமேற்
சுனைநீர் குடைந்து குளிர்பொழிற் பூத்துணர் சூடியபின்
நனைசேர் வரைகூய்க் கொடியூச லாடிய நங்கையருள்
உனையார் வருத்தினள் திண்டோ ளரச வுரையெனக்கே. (௪)

இறையோன் இறைவி தன்மை இயம்பல்.

85. நந்தா மணிவிளக் காமுது குன்றர் நபில்சிலம்பில்
இந்தார் முகங்கணை நீள்விழி வாய்கவி ரீர்மலரின்
கொந்தார் குழல்முகில் வேய்தோள் மலைமுலை கூறிடைநூல்
சந்தார் தளிரடி யென்மனத் தேவந்த தாழ்குழற்கே. (௫)

பாங்கி தலைவி அருமை சாற்றல்.

86. வேதன் படைத்த மலைகட் கிறையென வீழ்சடைநம்
நாதன் படைத்த முதுகிரி நாட நவில்மடந்தை
சீத னகத்தி லிருத்துவ ளுளுந் திகழ்வினுவேல்
ஈதென் னெளிய ளெனநீ யியம்ப லிறையவனே. (௬)

---

83. குறவர் - கண்ணப்ப நாயனர்; அமுது - திருமஞ்சனப்புனல்; "தரு மந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு, மருமூக்து வேணிக் கணி மா மலரவன் வாயுதகத், திருமஞ் சனக்குடம் பல்லா லவன்மென்று தின்ற தசை, அருமந்த போனக மன்றோநங் காளத்தி யப்பருக்கே" (திருக்காளத்தி நாதர் இட்ட காமியமாலை, 3) என்னும் செய்யுள் இங்கே அறியற்பாலது. சீர் உமது எனக.

84. நனை - பூவரும்பு; தேனுமாம். வரைகூய் - மலையெதிர் கூவி; வரை யெதிர் கூவல் மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று. கொடி ஊசல் - கொடி களால் அமைத்த ஊஞ்சல். நங்கையருள் - பெண்களுக்குள்ளே.

85. இந்து - சந்திரன்; ஆர்: உவம உருபு. வாய் கவிர் - வாய் முள்ளு முருங்கைப்பூப் போன்றது. இடையானது நூல். சந்து - சந்தனம்.

பி - ம். 'கொந்தார் முகில்குழல்'

86. சீ - திருமகள். தன் அகத்தில் நாளும் இருத்துவள்; அகம் - மனம்.

பி - ம். 'சீத னகத்தி னிருத்துவ ளுலுந் திகழ்விலளேல்'



தலைமகன் தலைவி இன்றியமையாமை இயம்பல்.

87. நேரின் றியபுகழ் நன்முது குன்றர் நெடுவரைமேற்
காரின் றியபயிர் பூமேற் றழைத்திடல் கண்டிடினும்
போரொன் றியவயிற் கண்ணுளை நீங்கிப் புவியிலுயிர்
ஏரொன் றியமட மாதே தவப்பய னெய்திலனே. (௭)

பாங்கி நின்குறை நீயே சென்று உரையென்றல்.

88. மின்போன் றவிர்சடை யார்முது குன்றர் வியன்சிலம்பா
பொன்போன் றவள்மன மேற்பன சொல்லிப் பொருத்துதற்கு
நின்போன் றவர்க்குத் தகுமது நீசென்று நின்குறைசொல்
என்போன் றவர்க்குத் தகாமொழி யாகுமற் றிம்மொழியே. ()

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

89. வயலாற் சிறந்த திருமுது குன்றர் மணிவரைமேல்
இயலாற் சிறந்த பசுங்கிளி பன்னு ளிலவதனை
மயலாற் சுழன்றது போலுன்னைக் காத்து வருந்தியது
கயலாற் பிறழ்ந்த விழியா யெனது கடுவினையே. (௯)

பாங்கி தலைவி இளமைத்தன்மை தலைவற்கு உணர்த்தல்.

90. சேவைக் கொடியி லுடையார் முதுகுன்றர் செஞ்சிலம்பிற்
பூவைப் புரக்கு மதியா லுயர்ந்த புரவலதன்
பாவைக் கிரங்கிப் பசித்தெனத் தன்முலைப் பால்கொடுக்கும்
பூவைக்குன் னேயைத் தவிர்ப்பதெவ் வாறு புகலுவதே. (௧௦)

காதலன் தலைவி முதறிவுடைமை மொழிதல்.

91. செறிமா தவர்தாழ் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பிற்
பிறியாத வன்பாற் றுயர்கொண்ட வென்னைப் பெருவிழியின்

---

87. நேர் இன்றிய - ஒப்பு இல்லாத; இன்றிய: "இருளு மின்றிய" (பாச வதைப் பரணி.) பூமேல் - பூமியின்மேல். உயிர்எர் ஒன்றிய - உயிரா னது அழகோடு ஒன்ற; உயிரென்றது தன்னுயிரை. தலைவியை நீங்கின் உயிர் நீங்குமென்பது கருத்து.

89. 'இலவுகாத்த கிளியைப்போல்' என்பது ஒரு பழமொழி.

90. சேவை - ரிஷபத்தை. பூவை - பூமியை. பாவைக்கு - பிரதிமைக்கு. பசித்தென - பசித்ததென; விகாரம். பூவைக்கு - நாகணவாய்ப் பறவை யைப் போன்றவளுக்கு.

மறியா தவள்போற் சிறிதருள் வைத்த வளர்குழலை
அறியா தவனென நீசொலக் கேட்டன னாயிழையே. (௯௧)

பாங்கி முன்னுற புணர்ச்சி முறையுறக் கூறல்.

92. வானுந் தொழுதகு திருமுது குன்றர் மணிவரைமேல்
தேனுந் தலர்க்குழற் பூங்கொடி மாதைச் செறிபொதும்பிற்
கானுந் தலர்க்கரந் தீண்டிய துண்டெனிற் காண்பிறரால்
ஊனுந் தியவடி வேலோய் பயனென னுனக்கிவணே. (௯௨)

தன்னிலை தலைவன் சாற்றல்.

93. விதியும் பணியுந் திருமுது குன்றர் வியன்சிலம்பில்
மதியு மரையுந் தொழுமுகத் தாயிந்த மாதையென்னைச்
சதியும் பதியு மெனவோத நீயருள் சார்ந்திலையேல்
வதியு மெனது துயர்நீங்க வேறு வழியிலையே. (௯௩)

பாங்கி உலகியல் உரைத்தல்.

94. செம்மேனி யையர் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பீர்
எம்மேனி யாருயிர்ப் பொன்னா ளிடத்தினி லிச்சையுண்டேல்
உம்மேனி வாடிடக் காரிய மென்னீ ருலகியலால்
வம்மேநிதானவளியாக்குவோன்முன்வரைந்துகொண்மே. (௯௪)

தலைமகன் மறுத்தல்.

95. மறையோ ரெரிமுன் வரைகுவன் செங்கனி வாய்மயிலைப்
பிறைசேர் முடிமுது குன்றர் வரையிற் பிறங்கமுதே
குறைசே ரெனது மயனோய் வருத்தங் குலையவின்று
பொறைசே ருமது விழியா ரருளைப் பொருந்துபின்னே. (௯௫)

91. மறியாதவள் போல் - தடைசெய்யாதவளைப்போல.

92. தேன் உந்து. உனக்குப் பிறரால் பயனென் எனக்கூட்டுக.

93. விதி - பிரமதேவர்; உம்: உயர்வு சிறப்பு. மரை - தாமரை. மாதைச் சதியும் என்னைப் பதியுமென ஓத என நிரனிறையாகக் கொள்க.

பி - ம். 'எனது தவநிற்க வேறு'

94. வம்மே - வாரும்; 'வம்மென்பது வாருமென்னும் பொருட்டாய் நின்றது' (பொருந. 101, ந.) நிதான வளி ஆக்குவோன் முன் - ஆதிகாரணமாயுள்ள காற்றினால் உண்டாக்கப்படுபவனாகிய அக்கினியின்முன்; நிதானம் - ஆதிகாரணம்; காற்றிலிருந்து தீயுண்டாகுமென்பர்.

பி - ம். 'செழுஞ்சிலம்பா', 'வம்மேனி கான்செல் வழியாக்குவோன்'

95. பொருந்துபின் - பொருந்தியபின்.



பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

96. விற்றோ ளுடைய புரவல வேடர் மிகுகொடியர்
கற்றோர் பரவு முதுகுன்றர் வெற்பிடைக் கண்டனரேற்
சற்றா யினுநெஞ் சிரங்காத் தறுகணர் தங்கலைநீ
பொற்றே ரிரவியு மேல்பாற் புகுந்தனன் போதுகவே. (௯௬)

தலைமகன் கையுறை புகழ்தல்.

97. சந்திரன் மேவு சடைமுது குன்றர் தடஞ்சிலம்பிற்
சுந்தர மேவுந் தனமயி லேயித் தலங்குதழை
இந்திரன் மேவுறு நாட்டினு மில்லை யிமயமுயர்
மந்தர மேவு மலர்வார் பொழிலினும் வைகிலதே. (௯௭)

பாங்கி கையுறை மறுத்தல்.

98. மணிமுத்த மாநதி சூழ்முது குன்றர் மணிவரையாய்
அணிபெற்ற நின்றழை யெங்கையிற் கொண்டிடி னாடவர்கள்
தணிவற்ற நெஞ்சுடன் கொள்வார் வெகுளியைத் தாழ்குழலார்
பணியுற்ற வுள்ளத் தயிர்ப்ப ரதனாற் பரிக்கிலமே. (௯௮)

ஆற்றா நெஞ்சினோடு அவன் புலத்தல்.

99. மதுமழை பெய்யும் பொழில்சூழ் முதுகுன்றர் மால்வரைமேல்
நிதிமழை பெய்யினு நல்வினை யில்லார்க்கு நீங்குதல்போல்
மதியுறு நெஞ்சே யிரங்குவ ளென்று மயங்கினை நீ
துதியுறு நந்தமை போல்வாடி னையத் தொடங்கினையே. (௯௯)

96. தங்கலை - தங்காதே. போதுக - செல்க.

பி - ம். 'தங்கலிர்நீர்', 'போதுவிரே'

97. இமய மலையினும் மந்தர மலையினும் மேவிய.

பி-ம் 'இமய முதல்'.

98. சூழ்தல் - வலம் வருதல்; "முத்தி முத்தாறு வலஞ்செயும் முதுகுன்றமே" (திருஞா. தே) அயிர்ப்பர் - ஐயுறுவார்.

99. "நாடெலாஞ் செந்நெல் விளையினும் நாட்டின் நதியெலாம் நவமணி தரினும், காடெலா மாடை காய்க்கினும் மேகங் கனகமே பொழியினும் மடவீர், ஆடலே புரியு மம்பல வாண ரவரவர்க் கமைத்ததே யல்லால், வீடெலாங் கிடந்து புரண்டுருண் டழினும் விதியலா தளதுவே றுளதோ" என்னும் பழம் பாடல் இங்கே கருதற் குரியது.

பாங்கி ஆற்றுவித்தல்.

100. செந்தா மரைமங்கை யன்னாள் மனத்தைத் திருத்தியிந்நாள்
சந்தார் தழையினை வாங்குவ னாளைத் தடம்பொழில்சூழ்
நந்தா முதுகுன்றர் நாடா வுனது நல் வகற்றி
இந்தா ரிரவு கழித்திவண் மேவுவை யேகுதியே. (௨௦)

கிழவோன் மடலே பொருளென மதித்தல்.

101. கனத்திற் றிகழ்கண்டர் நம்முது குன்றர் கழலிணையே
சனத்திற் பிறவி யொழிக்கு மருந்தெனுந் தன்மையைப்போல்
அனத்திற் றிகழுறு மங்கையர் காம வனலி...சோர்
மனத்திற் கரிய மருந்து மடலன்றி மற்றிலையே. (௨௧)

பாங்கிக்குத் தலைவன் மடலேற்றினை
உலகின்மேல் வைத்துரைத்தல்.

102. சோலைத் திருமுது குன்றர்தம் வெற்பிற் சுடர்த்தொடியார்
மாலைத் தரித்த மதியுடைக் காளையர் மன்னுலகின்
வேலைப் பரித்தகைம் மன்னவர் வீதியில் வேய்ந்தெருக்கை
ஓலைப் பனைப்பரி யூர்வார் கிழிபற்றி யொண்ணுதலே. (௨௨)

அதனைத் தன்மேல் வைத்துச் சாற்றல்.

103. பணியேறு செஞ்சடைத் தாழ்முது குன்றர் பனிவரைமேல்
அணியே றியமுலை மங்கைநல் லீரும் மடிபடிவேன்
பிணியே றியவென் மனத்தாழ்வு தீரப் பெறுகிலனேல்
மணியே றியமட லூர்வேன் விடியல் மறுகிடையே. (௨௩)

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்.

104. மல்லைத் தரித்த திணிதோட் பெருந்திறல் மன்னவகல்
வில்லைத் தரித்த முதுகுன்றர் வெற்பிலெம் மெல்லியலாள்

100. சந்தார் தழை - சந்தனத்தழை. இந்து ஆர் இரவு; இந்து - சந்திரன்.

101. மனத்திற்கு அரிய. கனத்தின் - மேகத்தைப்போல. சனத்தில் பிறவி - மனிதர்களுக்குள் ஒருவராய்ப் பிறத்தலை.

102. சுடர்த் தொடியார் மாலை - பெண்கள்பாலுள்ள காம மயக்கத்தை. பரித்த - தாங்கிய. எருக்கை வேய்ந்து. கிழி - படம்.

103. மணி மடல் மாவிற் கட்டப்படுவது.



வல்லைத் தரித்த தனத்தே ரெழுதினும் வாய்மழலைச்
சொல்லைத் தரித்திட வெவ்வா றெழுதுவை சொல்லெனக்கே.()

தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்.

105. விண்ணளக் கும்பொழில் சூழ்முது குன்றர் வியன்சிலம்பில்
மண்ணளக் கும்மவன் மைந்தனு நாண வரைகிழியிற்
கண்ணளத் தற்கரும் பேரெழி லாள்தனுக் காட்டிலனேற்
பண்ணளக் கும்மொழி யாய்தூ ரிகையென்றும் பற்றிலனே.()

பாங்கி அருளியல் கிளத்தல்.

106. விடும்பற் றுடையார்க் கருண்முது குன்றர் வியன்சிலம்பா
நெடும்பொற் பனைமட னீயேறி னன்றி னிகழ்பெடையி
னெடும்பற் பலபார்ப் புடன்வாழ் மனைசிதை வுற்றிடுமால்
குடும்பத் தலைவுசெய் யத்தகு மோவருட் கொற்றவர்க்கே. ()

பாங்கி கொண்டுநிலை கூறல்.

107. வள்ளற் றகைமை யுடையார் முதுகுன்றர் மால்வரையாய்
உள்ளத் தனமுன் னுரைமறுத் தாலவ் வொளியிழையைக்
கொள்ளத் தருமறை கூறிய வண்ணங் குவலயத்தே
தள்ளத் தகையது மன்றுபின் னாகுந் தருமுனக்கே. (௨௭)

தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற்கு உணர்த்தல்.

108. எருக்கு மிதழியுங் கொண்முது குன்ற ரெழில்வரையீர்
விரிக்குங் குழலும் பொடியாத் தனங்களு மேவினளை
உருக்கு மனமுடை யாளென வெண்ணி யுயர்விழிவு
தரிக்கு மறிவிலர் போலே தளர்தல் தகாதுமக்கே. (௨௮)

104. வல் - சூதாடு கருவி. தனத்து ஏர் - தனத்தினது அழகை.

105. மண் அளக்கும் அவன் மைந்தன் - திருமால் மைந்தனாகிய மன்மதன். வரை கிழியில் - உருவம்வரைந்த படத்தில். தனு - உடல். தூரிகை - எழுதுகோல்; "எழுதா விடிற்புகழ் வேண்டியயான், கையா லெடுத்தது தூரிகை யேயல்ல காரிகையே" வெங்கைக். 108.

106. விடும் பற்றுடையார் - பற்று விட்டவர்; இது விகுதி பிரித்துக் கூட்டலின்பாற்படும்.

107. உள்ளத்து அனம் - உன்னுடைய நெஞ்சிற் குடிகொண்ட அன்னம் போன்ற தலைவி.

108. விரிக்கும் குழலென்பது முதலியவற்றால் தலைவி பேதைப் பருவத்தின ளென்பதைக் குறிப்பிக்கின்றாள்.

தலைவன் தலைவி வருத்திய வண்ணம் உரைத்தல்.

109. வானிற் செறிபொழில் சூழ்முது குன்றர் மணிவரையில்
தேனிற் சிறிது சுவைத்துளி யேனுந் தெவிட்டுதல்போல்
கானிற் பொருந்து மயிர்குழ லாயுன் கருங்கணியென்
ஊனிற் பொருந்து முயிர்த்துன் பியப்பா வுளுற்றினளே. (௨௯)

பாங்கி தலைமகள் செவ்வி அருமை செப்பல்.

110. வன்னிக் குறுசொல் பயிற்றிலள் பந்த மணிக்கழங்கும்
மின்னுக் குறழிடை யாரொடு மாடினள் மேவுறுதம்
பன்னிக் கிடமருள் நன்முது குன்றா பனிவரையிற்
கன்னிக்கி யான்சொல்வ தெவ்வா றிருந்திறற் காவலனே. (௩௦)

தலைவன் தலைவி செவ்வி எளிமை செப்பல்.

111. கார்காட்டு பூங்குழல் மெல்லிய லாள்முன் கடிதுசென்று
வார்காட்டு கின்முலை யாயென் வரவை வருத்துரைத்தாற்
பார்காட்டு விண்சி றுறுமுது குன்றர் பனிவரைமேல்
ஆர்காட்டு நீயென வந்தே தழுவி யகங்கொளுமே. (௩௧)

பாங்கி என்னை மறைப்பின் எளிதென நகுதல்.

112. சங்காழ் புனற்றடஞ் சூழ்முது குன்றர் தடஞ்சிலம்பா
செங்கேழ் மணியு மவைதரிப் போருஞ் சிறந்துறநூல்
தங்கேழ் வடத்தினுக் கின்றி யமையாத் தகைமையைப்போல்
நுங்கூழ் புணர்ப்பினு மென்னை மறைப்பி னுமக்கரிதே. (௩௨)

அந்நகை பொறுது அவன் புலம்பல்.

113. தேயுற்ற வெண்பிறை சூடு முதுகுன்றர் செஞ்சிலம்பில்
நோயுற்ற மெய்யினர்க் கந்நோய் மிகவுற நொக்குதல்போற்
பாயுற்ற மான்விழி மெல்லிய லாள்மயல் பற்றெனைநீள்
வேயுற்ற தோளிணை யாய்மிக வாட விளம்பினையே. (௩௩)

109. தேனில் சுவைத்துளி சிறிதேனுமெனக் கூட்டுக. தெவிட்டுதல் - மயக்குதல். கருங் கணி - கரிய கண்களை உடையவள். துன்பு - துன்பத்தை. உளுற்றினள் - செய்தாள்.

110. வன்னிக்கு - கிளிக்கு. பன்னிக்கு - தேவியாருக்கு. இடம் - இடப்பாகத்தை.

112. வடம் - மாலை. வடத்தினுக்கு நூல் இன்றி யமையாத தகைமையைப் போல். நுங்கு ஊழ் - நுகர்தற்குக் காரணமாகிய நல்வினை.

பி-ம். 'மணிவட முந்தரிப் போரும்'

113. நொக்குதல் - அடித்தல்; வழக்கு.

186935

# செய்தித்திரட்டு.

சிதம்பரம்:—திரு வாதிரைத் திருவிழா வழக்கம்போல் சிறப்பாக நிறைவேறியது. அறுபத்து மூவர் திருமடத்தில் மணிவாசக ஞானசம்பந்தசபையாரால் மகோபந்யாசங்கள் செய்யப்பெற்றன. பல பிரமுகர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள்.

ஈசானியமடத்தில் அடியவர்கட்கு அன்புடன் அமுதருத்தப் பெற்றது. ஷை மடாதிபதியவர்களின் அன்புக்குவந்து அன்பர் சிலர் உதவிபுரிந்தனர்.

திருத்தென்துடித்திட்டை:—சிவாலயத்தில் மார்கழித் திருவாதிரைத் திருநாளில் சிவகாம சுந்தரிசமேத நடராசப் பெருமானுக்குத் திருமஞ்சன திருவாராதனைகளும் திருவுலாவும் செய்யப்பெற்றன.

கண்டாச்சிபுரம்:—மார்கழி ௭௨ மாலை போர்டு ஆண்பாடசாலையில் மாணவர்சங்க இரண்டாவது ஆண்டுவிழா, தென்னாற்காடுஜில்லா கல்விக்கழக அங்கத்தினர் திரு வி. எஸ். இராமலிங்க முதலியார் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்களான எ. முத்தைய பிள்ளையவர்களும், க. பொ. இராஜமாணிக்க முதலியாரும், கல்வி—மனுநீதிகண்ட சோழர் என இரு பிரசங்கம் புரிந்தனர்.

சாத்தூர்:—தமிழ்ச்சங்கத்தின் பத்தொன்பதாவது ஆண்டுவிழா, மார்கழி, ௧௪, ௧௫ களில், மகிபாலப்பதி பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருநெல்வேலி இசைவாணர் திரு. சுந்தரமூர்த்தி ஓதுவார் தமிழ்மறை யோதினர். தலைவர் தமிழின் தொன்மை அதன் நன்மைகளை விளக்கி முன்னுரை கூறினர். நாகர்கோயில் திரு. ஆறுமுகம் பிள்ளையவர்கள் "அடியார்கள்"- எட்டயபுரம் சமஸ்தானவித்துவான் திரு. சாமிஐயங்கார் "இராமாயணம்"- யாழ்ப்பாணம் தமிழ்ப்பண்டிதர் திரு வ. மு. இரத்திநேசுவரையர் "அப்பரடிகளின் அரும்பணி"—திரு. சாமிஐயங்கார் 'திருக்குறள்'—மேலைச்சிவபுரி தமிழாசிரியர் திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள் 'திருக்குறளும் இராமாயணமும்'—சைவபஞ்சாங்கக் கணிதர் திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் 'சுந்தரர் தேவாரம்' என்பனபற்றி விரிவுரைநிகழ்த்தினர். தலைவர் ஆரியம் தமிழ் எனும் இருமொழிப் பிரமாணங்கள் நிரம்பிய முடிப்புரை கூறினர்.

கரிசூழ்ந்த மங்கலம்:—சிவகாம அம்பிகா சமேத ஆனந்தநடராஜ மூர்த்திக்கு ஆருத்ரா மகோற்சவம் முறைபே விமரிசையாக நடைபெற்றது.

சைவசமய பக்தஜன சபை:—இச்சபையார் சென்னையிலிருந்து மார்கழி ௯உ புறப்பட்டு, திருவாவடுதுறை திருப்பனந்தாள் திருச்சேய்ஞலூர் திருவாப்பாடி திருத்துருத்தி திருவேள்விக்குடி திருமங்கலக்குடி திருக்கோழம்பம் திருக்கஞ்சனூர் திருத்தென்குரங்காடுதுறை ஆகிய திருத்தலங்களையடைந்து திருமஞ்சன திருவாராதனைகளுடன் திருக்கோயில் வழிபாடும் தமிழ்வேத பாராயணமும், மாகேசுவரபூசை முதலியனவும் செய்து, ௧௯உ இரவு சென்னைக்குத் திரும்பினர்.

பிறந்தை:—ஸ்ரீகுமாரக்கடவுள் மகாபுஷ்ய மகோத்ஸவங் கொண்டருள இம்மதி ௧௬உ தஞ்சமாநகரினின்றும் தண்ணீர்மாமலைக்கு வெள்ளிரதப் பவனிகொண்டு, ௧௭உ மகாபுஷ்ய மகோத்ஸவம் மகேசுவரபூசை யுவந்து, அன்றிரவு திருவுலாக்காட்சி தந்து, ௧௮உ சர்க்கரைக் காவடிகளின் வைபவங் கடைக்கணித்து, ௧௯உமாலை தண்ணீர் மாமலையினின்றும் இரதாரூடராய்க் குதிரைப் பந்தயத் திடரில் வாணக்காட்சிகண்டு தமது இருக்கை சேர்ந்து ரத்னசிங்காதனத்திருந்தருளுவா னென்று வணிக நகரத்தார் திருமுகம் தந்துள்ளார்கள்.

உ

## மதுரை ஸ்ரீவர்ணாச்ரம தர்ம ஸ்வராஜ்ய சங்க

# அறிக்கை.

ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் "அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்" என்ற திருநாமத்துடன் சில வருஷங்களுக்கு முன் ஒரு மகா சபை ஸ்தாபிக்கப்பெற்றுப் பிரதான நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அடிக்கடி சென்று விசேஷசபைகளை வருஷந்தோறுங்கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றி அதிகாரிகளுக்கு அறிவித்தும், சுருதி, ஸ்மிருதி, யுக்தி அனுபவம் முதலான பிரபல பிரமாண பூர்வகமாய் ஆங்காங்கு உபந்யாசங்கள் செய்தும் சனாதனதர்ம பிரசாரம் செய்துகொண்டு இப்பொழுது சுமார் 500 கிளைச்சபைகளுடன் பிரகாசித்து வருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

அந்த மகாசபைக்கு நமது பரதகண்டத்தில் 4000 கிளைச்சபைகளாவது இருக்கவேண்டும் என்றும், பிரகிருத காலதேச நிலைமையை உத்தேசித்து ஒவ்வொரு சபைமூலமாயும் நம்முடைய அபிப்ராயங்களையும் குறைகளையும் அதிகாரிகளுக்கு அப்போதைக்கப்போது தெரியப்படுத்த வேண்டும் என்றும், அவ்வாறு தொடர்ச்சியாய் நடவடிக்கைகள் நடத்தி வந்தாலொழிய நமக்குக் கார்யசித்தி ஏற்படுவது கஷ்டம் என்றும் மாக்ஷிமை தங்கிய நமது ராஜப்பிரதிநிதி யவர்கள் சென்ற மார்ச்சுமாதம் டில்லி மாநகரம் சென்ற அகில இந்தியா வர்ணாச்ரம தர்ம தூது கோஷ்டிக்கு வற்புறுத்தி யிருப்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஆகையால், இப்பொழுது இந்திய சட்டசபையில் சனாதன தர்ம விரோதிகளான சில இந்தியர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற விவாகரத்து சட்டமசோதா, ஆலயப்பிரவேச சட்டமசோதா, தீண்டாமை விலக்கு சட்டமசோதா முதலானவைகளையும், சாரதாசட்டத்தையும், சாதிமத வித்வம்சனபிரசாரம்,கர்ப்பத்தடை பிரசாரம் முதலான சனாதனதர்மவிருத்தமான முயற்சிகளையும் எதிர்ப்பதற்காக மாக்ஷிமை தங்கிய ராஜப்பிரதிநிதி யவர்கள் வற்புறுத்தியபடி எல்லா நகரங்களிலும், கிராமங்களிலும், ஒரு வர்ணாச்ரமதர்ம ஸ்வராஜ்ய சங்கக் கிளைச் சபையை உடனே ஸ்தாபித்து நாளது மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒருமுறையாவது மீட்டிங்கு கூடி தீர்மானங்களை நிறைவேற்றி சபாத்யக்ஷ ரவர்களுடைய கையெழுத்து சகிதம் மதுரை ஸ்ரீவர்ணாச்ரம தர்ம சுயராச்சிய சங்க காரியதரிசிகளுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

R. கணபதி ஐயர்,
மாடபூசி. V. K. ஸ்ரீநிவாசாசாரியார், } காரியதரிசிகள்.

N. நடேச ஐயர்,
பிரசிடெண்ட்.

## "சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ | 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ | 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ | 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ | 40--0--0 |
| தனிப்பிரதி | அணா | 0--3--0 | | | |

---

பலவான்குடி "சிவநேசன்" அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.